

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குறள் வழி



**தூங்காமை கல்வி துணிவுடைமை யிம்மூன்றும்**
**நீங்கா நிலனாள் பவர்க்கு.**

**பொருள் :** உலகை ஆளுகின்ற அரசருக்கு ஒரு காரியத்தை விரைந்து செய்தல், கல்வி, தைரியம் என்னும் இம் மூன்று குணங்களும் எப்பொழுதும் இருக்க வேண்டும். (383)

**அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா**
**மான முடைய தரசு.**

**பொருள் :** நீதி தப்பாது நின்று நாட்டில் பாவங்கள் நில்லாமல் நீக்கி ஆண்மையில் குறைவுபடாத பெருமையுடையவன் சிறந்த அரசனாவான். (384)

---

# நற்சிந்தனை

*மறப்பேனோ குருநாதன் தன்னை*

**தொண்டு செய்வார்**



ஒன்றிரண் டென்றே யுரையார் பெரியார்
கன்றும் மனத்தைக் கண்டாற் பரிவார்
கொன்றுயிர் வாழக் குறியார் திரிவார்
நன்றிது தீதென நலியார் அரிலும் 05

எல்லா ரிடத்தும் உள்ளாய் தூயாய்
எல்லா எழிலும் நீயே யானாய்
கல்லாய் மலையாய்க் கவின்பெறு மரமாய்ப்
புல்லாய்ப் பூடாய்ப் பொலிவாய் நீயே 06

உன்துணை யன்றி யுயிர்த்துணை காணேன்
பின்னை யென்னைப் பிரியா துறைவாய்
அன்னையுந் தந்தையும் ஆசா னும்நீ
முன்னைப் பொருட்கெலாம் முன்னைப் பொருள்நீ 07

உடல்பொருள் ஆவி யுன்னதே இறைவா!
திடம்பெற ஞானத் தெளிவை நல்குதி
கண்ணே கருத்தே யெண்ணே எழுத்தே
விண்ணே விண்ணில் விளங்கும் மதியே 08

பண்ணே பண்ணிற் கனியே பரம
எண்ணேன் இனிப்பிற தெய்வம் நாயேன்
ஏத்தி யேத்தி யிணங்கி வணங்கச்
சாற்றிய கவியை யேற்றிடு வாயே 09

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஞானச்சுடர்





வெளியீடு
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்



வெளியீடு - 3 சுடர் - 314

**2024** **பொருளடக்கம்** **மாசி**


| | | |
|---|---|---|
| வாழும் கலை | சி. லோகேஸ்வரி | 01 - 03 |
| வேண்டத்தக்கது அறிவோய்... | செ. பாலச்சந்திரன் | 04 - 07 |
| பகவத்கீதையின் தத்துவம் | பூ. சோதிநாதன் | 08 - 11 |
| அடக்கம் உயர்வு தரும் | சி. நற்குணலிங்கம் | 12 - 15 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 16 - 17 |
| அவதாரங்களும்... | இராம. ஜெயபாலன் | 18 - 19 |
| நல்லூர் தேரடிச் சித்தர் | கு. சோமசுந்தரம் | 20 - 24 |
| தாய்ச் செல்வம் | திருமதி பொ. திலகவதி | 25 - 26 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 27 - 30 |
| எண்ணம்போல் எல்லாம்... | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 31 - 32 |
| சித்தர் பூமி | கு. சிவபாலராஜா | 33 - 37 |
| தை அமாவாசை சிறப்புக்களும்... | க.கு.க. சிவபாலன் | 38 - 39 |
| சூரியனும் சூரிய வழிபாடும் | வி. செல்வரத்தினம் | 40 - 44 |



**வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)**

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

**தொலைபேசி இல: 021 321 9599, 021 226 3406**

**அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்**

Printed & Published By:
Sannithiyan Achchirama Saiva Kalai Panpaddu Peravai.
Selvasannithi, Thondaimanaru.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர் தைமாத வெளியீடு

## வெளியீட்டுரை:

313ஆவது தைமாத ஞானச்சுடர் மலருக்குரிய வெளியீட்டுரையினை வலிகாமம் பிரதிக் கல்விப் பணிப்பாளரும் சைவப்புலவருமாகிய திரு சு. தேவமனோகரன் அவர்கள் ஆற்றினார்கள்.

அவர்தம் உரையில் ஆச்சிரமம் ஆற்றும் பலவகை அறப்பணிகளின் தன்மை பற்றியும் பேரவையினால் கடந்த பல வருடங்களாக வெளிவந்து கொண்டிருக்கும் ஞானச்சுடர் மலர் பற்றியும் தனது மனதில் எழுந்த எண்ணக் கருத்துக்களை சபையில் இருந்த அடியார்களுக்கு எடுத்துக் கூறினார்.

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய தரிசனத்திற்கு பலமுறை வந்திருந்து அன்னதானச் செயற்பாட்டில் பங்குபற்றி இருந்தாலும் இன்றுதான் முதன்முறையாக இம் மேடையில் அதுவும் முருகன் கருணையுடன் வெளிவந்து கொண்டிருக்கும் இம் மலருக்குரிய வெளியீட்டுரையில் பங்குபற்றுவது வேற் பெருமானின் அருளோடு கூடிய நிகழ்வு என்றே கூறவேண்டி உள்ளது. தைமாத மலருக்குரிய இச் செயற்பாட்டினை ஆற்றுவதற்கு எம்மை அழைத்த பேரவை உறுப்பினர்களுக்கும் நன்றி கூறி மலரின் வெளியீட்டுரையை நிறைவு செய்தார்.

## மதிப்பீட்டுரை:

தைமாத மலருக்குரிய மதிப்பீட்டுரையினை இளைப்பாறிய அதிபரும், சமாதான நீதிவானும், பேரவை உறுப்பினருமாக சேவையாற்றும் திரு ஆறுமுகம் சிவநாதன் அவர்கள் நிகழ்த்தினார்கள்.


ஞானச்சுடர் மலர் வெளிவந்த ஆரம்ப காலம்தொட்டு வருடா வருடம் தைமாத மலருக்கு மதிப்பீட்டுரை ஆற்றும் செயற்பாட்டை சந்நிதி வேலவனும், ஆச்சிரம சுவாமிகளும் எமக்களித்த பெரும்பேறே என்றுதான் கூறவேண்டும். அவ்வகையில் மாதாமாதம் வெளிவந்துகொண்டிருக்கும் ஞானச்சுடரின் தைமாத மதிப்பீட்டுரையினை வழங்குவதில் பெருமை அடைகின்றேன். மலர் வெளியீட்டில் பங்கு பற்றும் சமயங்களிலெல்லாம் மலரின் பரிணாமங்கண்டு மலைத்ததுண்டு. எப்படி இவர்களால் இச் செயற்பாட்டை நிறைவாக நடத்த முடிகின்றது. இடர் சூழ்ந்த காலங்களில் கூட இம் மலர் பிரகாசிப்பதென்பது சந்நிதி வேலவனது பெருங் கருணை என்றே கூறவேண்டும்.

இறுதியாக மலரில் இடம்பெற்ற ஒரு சில ஆக்கங்களின் தன்மைபற்றி சபையில் இருந்தவர்களுக்கு விளக்கிக் கூறியதோடு சிறப்புப்பிரதி பெறவந்த மக்கள் வங்கி சமூகத்தினருக்கும் நன்றி கூறி தனது மதிப்பீட்டுரையினை நிறைவு செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

ஆற்றங்கரை வேலவனின் அருளைப்பெற்று அவனுடன் இரண்டறக் கலந்து பேரின்பம் பெற்ற அருளாளர் வரிசையில் வைத்து மதிப்பிடக்கூடிய நடமாடும் தெய்வமாக வாழ்ந்து வழிகாட்டியவர்தான் முருகேசு சுவாமிகள்.



இவர் மக்களை பக்தி மார்க்கத்தில் ஈடுபடுத்தி தர்ம வாழ்க்கையில் வழிப்படுத்தி ஆற்றிய தொண்டினை அவரின் காலத்தில் வாழ்ந்த பலரும் - இன்றும்கூட வியந்து பாராட்டி வாழ்த்தி நிற்பதைக் காதாரக் கேட்கிறோம்.

முருகேசு சுவாமிகளின் பெரு முயற்சியினால் 05.05.1995இல் ஆரம்பிக்கப்பட்ட சந்நிதியான் ஆச்சிரமம் எந்தவித குறைவும் இன்றி நிறைவாக வளர்ச்சிபெற்று வருவது குறிப்பிட வேண்டியதாகும். சைவ சமயத்திற்கும் தமிழுக்கும் பெருமை சேர்த்த 63 நாயன்மார்களை நினைவுகூரும் "அறுபத்து மூவர் பூசையை" முதன் முதலாக சந்நிதியான் ஆச்சிரமத்தில் தோற்றுவித்த பெருமையும் முருகேசு சுவாமிகளுக்கே உரியதாகும். அத்துடன் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் பணிகள் அத்தனைக்கும் உந்து சக்தியாகத் திகழ்ந்தவர் அவர்.

செல்வச்சந்நிதி ஆலயத்தின் புனரமைப்புப் பணிகள், சிறப்பான - நேர்த்தியான பூசை முறைகளை நெறிப்படுத்தியவரும் அவரே. 23.05.1920இல் அவதரித்த முருகேசு சுவாமிகள் 16.03.1997இல் இறைவன் திருப்பாதங்களைச் சென்றடைந்தார்.

18.03.2024 திங்கட்கிழமை முருகேசு சுவாமிகளின் குருபூசைத் தினம் சந்நிதியான் ஆச்சிரமத்தில் பக்திபூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது. சுவாமிகளால் ஆரம்பிக்கப்பட்ட கும்பாபிஷேகதின நிகழ்வு செல்வச்சந்நிதி ஆலயத்தில் 09.04.2024 சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் வங்கி சமூகத்தினருக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தின் நன்றி உரித்தாகுக!

மேற்படி தைமாத ஞானச்சுடர் சிறப்புப்பிரதி பெறும் நிகழ்வில் கடந்த பல வருடங்களாக மக்கள் வங்கியில் பணியாற்றும் அன்பர்களினால் பெறப்பட்ட நிதியின்மூலம் சமணப்பிட்டி அறநெறிப் பாடசாலையின் கூரை சீர் வழங்கியதிலிருந்து இன்றுவரை வருடாவருடம் தைமாத சிறப்புப் பிரதியினால் வரப்பட்ட நிதியினைக் கொண்டு பலவிதமான சமூகசேவைப் பணிகளை முன்னெடுத்துச் செல்வதில் நாம் பெருமைப்படுகின்றோம்.

இச் செயற்பாடுகளுக்கு முன்னின்று உழைத்த மக்கள் வங்கியினைச் சார்ந்த திரு சி. பத்மநாதன் அவர்களுக்கும், திரு வ. சண்முகநாதமுதலி, திரு தி. சிவகுமாரன் அவர்களுக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தின் நன்றியினைத் தெரிவித்துக்கொள்வதோடு இத்தகைய செயற்பாடுகளை ஊக்குவித்துக் கொண்டிருக்கும் மக்கள் வங்கி சமூகத்தினருக்கும் எமது நன்றியினைத் தெரிவித்துத் தொடர்ந்து இச் செயற்பாடு மென்மேலும் பிரகாசிக்க சந்நிதியானை வேண்டி நிறைவு செய்கின்றோம்.

## தைமாதம் 2024 சிறப்புப்பிரதி பெற்ற மக்கள் வங்கியின் கிளைகளும் பங்களிப்பும்

| | |
|---|---|
| மக்கள் வங்கி இளைப்பாறியோர் | 106,000. 00 |
| மக்கள் வங்கி யாழ். பிரதேச காரியாலய உத்தியோகத்தர்கள் | 36,000. 00 |
| மக்கள் வங்கி யாழ். ஸ்ரான்லி வீதி உத்தியோகத்தர்கள் | 31,000. 00 |
| மக்கள் வங்கி யாழ். பிரதான வீதி உத்தியோகத்தர்கள் | 23,000. 00 |
| மக்கள் வங்கி யாழ் பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள் | 20,000. 00 |
| மக்கள் வங்கி யாழ் கன்னாதிட்டி உத்தியோகத்தர்கள் | 15,000. 00 |
| மக்கள் வங்கி சுன்னாகம் உத்தியோகத்தர்கள் | 20,000. 00 |
| மக்கள் வங்கி சங்கானை உத்தியோகத்தர்கள் | 10,000. 00 |
| மக்கள் வங்கி தெல்லிப்பழை உத்தியோகத்தர்கள் | 17,000. 00 |
| மக்கள் வங்கி சாவகச்சேரி உத்தியோகத்தர்கள் | 12,000. 00 |
| மக்கள் வங்கி கொடிகாமம் உத்தியோகத்தர்கள் | 9000. 00 |
| மக்கள் வங்கி அச்சுவேலி உத்தியோகத்தர்கள் | 8000. 00 |
| மக்கள் வங்கி பருத்தித்துறை உத்தியோகத்தர்கள் | 10,000. 00 |
| மக்கள் வங்கி நெல்லியடி உத்தியோகத்தர்கள் | 5000. 00 |
| மக்கள் வங்கி ஊர்காவற்றுறை உத்தியோகத்தர்கள் | 2000. 00 |
| மக்கள் வங்கி வல்வெட்டித்துறை உத்தியோகத்தர்கள் | 5000. 00 |
| மக்கள் வங்கி பரந்தன் உத்தியோகத்தர்கள் | 24,000. 00 |
| மக்கள் வங்கி முல்லைத்தீவு உத்தியோகத்தர்கள் | 2000. 00 |
| மக்கள் வங்கி கிளிநொச்சி உத்தியோகத்தர்கள் | 4000. 00 |
| மக்கள் வங்கி திருமலை மாவட்ட உத்தியோகத்தர்கள் | 60,000. 00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**M. இந்துசேகரம்**
(அவுஸ்திரேலியா)

**சிவபாலன் சுந்தரமூர்த்தி**
(சுவிஸ்லாந்து)

**த. ரவீந்திரகுமார்**
(உடுப்பிட்டி)

**திருமதி. த. சுரேந்திரநாதன்**
(இளை. அதிபர், மயிலியதனை, தொண்டைமானாறு)

**செ. நவரெத்தினராசா J.P**
(கப்பூது, குப்பிளான்)

**அதிபர்**
(யா/ தொண்டைமானாறு வீ. ம. வித்தியாலயம்)

**த. இராசேஸ்வரன்**
(இராஜ உதயம், அல்வாய்)

**திருமதி இ. பத்மநாதன்**
(கனன் போட்டோ, பருத்தித்துறை)

**சி. சிவம்**
(சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை, நெல்லியடி)

**வ. நந்தகுமார்**
(அம்மன் கோவிலடி, கரணவாய் தெற்கு)

**திருமதி T. பாக்கியம்**
(கந்தர்மடம்)

**நா. பவளம்**
(அச்சுவேலி)

**திருமதி சி. நாகேஸ்வரி**
(புத்தூர்)

**கணேசகுலசிங்கம் துஷிகரன்**
(அச்சுவேலி)

**க. பிந்துஷா**
(மீசாலை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொ. இராமலிங்கமூர்த்தி**
(இளை. உதவி மின் பொருளியளாலர், கரவெட்டி)
**சி. மகாலிங்கம் J.P**
(மலையன் தோட்டம், கொற்றாவத்தை)
**சு. சிவதாசன் G.S**
(புன்னாலைக்கட்டுவன் வடக்கு)
**தலைவர், செயலாளர்**
(கலைவாணி ச.ச. நிலையம், தொண்டைமானாறு)
**உரிமையாளர்**
(ஜெயகிருஷ்ணா, K.K.S. வீதி, சுண்ணாகம்)
**ஐ. லோகஞானம்**
(அஞ்சல் அதிபர், சுண்ணாகம்)
**ஆ. விஸ்வலிங்கம்**
(இளைப்பாறிய ஓவசியர், கல்வியங்காடு)
**திருமதி P. சிவபாலன்**
(அல்வாய்)
**கந்தசாமி தேவராணி**
(ஆனைக்கோட்டை)
**உரிமையாளர்**
(ஸ்ரீ முருகன் தொ.தொ. நிலையம், யாழ்ப்பாணம்)
**செ. சந்திரமூர்த்தி**
(சந்திரா தொலைத்தொடர்பு நிலையம், உடுப்பிட்டி)
**சி. பஞ்சலிங்கம்**
(ஞானவைரவர் கோவிலடி, உரும்பராய் கிழக்கு)
**செ. தேவேந்திரா**
(ஒஸ்காவீதி, உரும்பராய்)
**இராசரெட்ணம் வசந்தன்**
(ஊரெழு மேற்கு சுண்ணாகம்)
**இ. குமாரதாசன்**
(இளை. பிராந்திய மருந்தாளர், இடைக்காடு)
**R. குலசிங்கம்**
(இளை. அதிபர், கோண்டாவில்)
**N. K. தங்கராசா**
(இளை. தபாலதிபர், புலோலி)
**இ. பாலகிருஷ்ணன்**
(முகமாலை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சி. புவிராஜ்**
(சண்டிலிப்பாய்)
**உரிமையாளர்**
(நாதன் மெடிக்கல் சென்ரர், நெல்லியடி)
**செ. செல்வரெத்தினம்**
(இளை. அதிபர், சுன்னாகம்)
**த. விவேகானந்தன்**
(சியாமி பேபி நீட்ஸ், பருத்தித்துறை)
**இ. ஜெயபாலன்**
(பெற்றோலியக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்)
**மா. ந. பரமேஸ்வரன்**
(கந்தசுவாமி கோவிலடி, இணுவில்)
**பா. கேதீஸ்**
(உரும்பராய்)
**S. ஈஸ்வரன்**
(டச்சுவீதி, சித்தங்கேணி)
**க. சிவசுப்பிரமணியம்**
(கோண்டாவில்)
**கெ. தவராசா**
(விவேகானந்தர் வீதி, இணுவில்)
**வி.ந. ஸ்ரீதரன்**
(இளை. அதிபர், யாழ்ப்பாணம்))
**செ. செல்விகா**
(நாவலடி ஒழுங்கை, மானிப்பாய்)
**வே. மதிபாலசிங்கம்**
(செட்டியர் தெரு, கரவெட்டி)
**சு. நாகம்மா**
(சாவகச்சேரி)
**நா. முருகையா**
(ஊரெழு கிழக்கு, சுண்ணாகம்)
**செல்வராசா பொன்னுத்துரை**
(கரந்தன், நீர்வேலி)
**விஸ்வலிங்கம் குகலிங்கம்**
(பண்ணாகம், சுழிபுரம்)
**மா. தேவநேரு**
(செட்டிவளவு லேன், இணுவில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சசிகரன் கௌதமன்**
(அச்சுவேலி)
**செ. பாலச்சந்திரன்**
(கொக்குவில் மேற்கு, கொக்குவில்)
**இ. புவனேந்திரராஜா (பிள்ளையார்)**
(நெல்லியடி, கரவெட்டி)
**தி. பாலசுப்பிரமணியம்**
(பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்)
**மா. விஸ்வநாதன்**
(விஸ்வா மில், புத்தூர்)
**நாகன் கிருஸ்ணபிள்ளை**
(கோண்டாவில்)
**சி. கந்தையா**
(சுன்னாகம்)
**K. விஷ்ணுமோகன்**
(உரும்பராய் கிழக்கு)
**பொ. சிற்றம்பலம்**
(கொடிகாமம்)
**பா. சிவபாக்கியம்**
(கைதடி)
**சிதம்பரநாதன் ஸ்ரீகரன்**
(புத்தூர்)
**நாகராசா சாந்தி**
(அச்சுவேலி)
**க. ரட்ணேஸ்வரன்**
(இளை. அதிபர், சங்கானை)
**க. கிருஷ்ணேஸ்வரக்குருக்கள்**
(ஆனைக்கோட்டை)
**திருமதி விஜயலட்சுமி இராசநாயகம்**
(வட்டுக்கோட்டை)
**திருமதி செல்வநாயகம்**
(வடலியடைப்பு)
**திருமதி சீதாதேவி இந்திரன்**
(யா/ கச்சாய் மகா வித்தியாலயம்)
**உரிமையாளர்**
(சண்முகானந்தா ரெக்ஸ்ரைல்ஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழும் கலை

– சி. லோகேஸ்வரி அவர்கள் –

வாழ்வின் நோக்கம் வாழ்க்கை பற்றிய ஞானத்தை அடைதலே. வாழும் முறையை ஆறுமுகநாவலர் அவர்கள் மிக அழகாக முறைப்படுத்திக் கூறியுள்ளார். அதிகாலை கண் விழிப்பதிலிருந்து பல் துலக்குவது, குளிப்பது, நீர் அருந்துவது, உணவு உண்பது, தூங்கு வதற்கு முன் செய்யவேண்டியவை என்று வகைப்படுத்தியுள்ளார்கள். அத்தோடு பக்தியையும் இன்னும் பலவற்றையும் இணைத்துள்ளார்கள். இவற்றைத் தினசரி மனப்பூர்வமாகவும் ஒழுங்காகவும் கடைப்பிடிப்பதே வாழ்க்கை. அப்போ வாழ்க்கை தித்திக்கும். மகிழ்ச்சி நிறைவு தானே வரும். சித்தி முத்திக்கு இதுதான் அத்திவாரம். வாழும் வாழ்க்கை இலகுவான தாகவும் எளிமை இனிமை நிறைந்ததாகவும் இருக்கும். இது சிறப்பு. ஒரு பயணம் மேற் கொள்ளும்போது நாம் அதிக சுமைகளைக் குறைத்தால் பிரயாணம் சுலபமானதாக சந்தோஷமாக இருக்கும். நம் வீட்டில் குளியலறை ஒழுங்கை எடுத்துக்கொண்டால் தேவை யான அத்தியாவசியமான பொருட்கள் மட்டும் இருந்தால் போதுமானதே. பார்ப்பதற்கும் அழகு. வீட்டுக்கும் சிறப்பு. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு. இது மூத்தோர் வாக்கு. மற்றோர் வாங்குவதைப் பார்த்து வாங்குவது நம் கண்களில் கண்டவற்றை வாங்குவது இப்படியெல்லாம் வீட்டில் பொருட்கள் சேர்ப்பது குப்பைகளைச் சேர்ப்பதற்கு ஒப்பாகும். இங்கு ஐம்பொறிகளின் அடக்கம் அவசியம். நம் தேவைக்கானவை கண்டிப்பாக வீட்டில் இருக்கத்தான் வேண்டும். ஆசைக்கு புகழுக்கு பெருமைக்கு என்று சேர்க்கும் பொருட்கள் தேவையற்றவையே.

உணவுப் பழக்கத்தைப் பார்ப்போமானால் உடல் ஆரோக்கியம் கருதி உணவை முறையாகவும் அளவோடும் உட்கொள்ள வேண்டும். நொறுங்கத் தின்றால் நூறு வயது என்றார்கள் ஆன்றோர்கள். உணவை நன்கு மென்று உண்பது பல நோய்களுக்குத் தீர்வு ஆகும். ஒருவருக்கு பிடித்த சுவையான உணவு என்று அதிகம் உண்பாரேயானால் அதை ஜீரணிக்க அமிலம் எங்கிருந்து சுரக்கும். அமிலம் பற்றாக்குறை காரணமாக அளவுக்கு மீதியான உணவு தேங்கிப் புளித்து ஜீவனோபாயத்துக்கு எதிரானவையாகத் தோற்றப்படும். உணவு உண்ணும்போது எண்ணம் சிதறாது உணவை ரசித்து ருசித்து உண்ணும்போது உணவின் முழு சக்தியும் கிடைக்கின்றது. எந்த செயல் செய்யினும் நம் உணர்வு அந்த ஒன்றிலேயே நிற்க வேண்டும். இது எல்லாவற்றுக்கும் பொருந்தும். நீர் அருந்துவதுகூட மட மடவென்று அண்ணாந்து குடிக்காது வாயால் நீரை உறிஞ்சி எடுத்து விழுங்குவதுதான் ஜீவனோபாயத்துக்கு சிறந்தது. இந்தமுறை உமிழ்நீரை அதிகம் சுரக்க வைக்கிறது. உமிழ்நீர் ஓர் மாமருந்து என்கின்றனர் அமெரிக்க விஞ்ஞானிகள். உமிழ்நீரை ஆராய்ச்சி

*விலகி நிற்பவன் வெல்வதில்லை. வெல்ல நினைப்பவன் விலகுவதில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணியதில் பத்து பதினைந்து வருடங்களுக்குப் பின் வரப்போகும் நோய்களைக்கூட கண்டறிய முடியும் என்று கூறியுள்ளார்கள்.

இது குழந்தை வளர்ப்புப் பற்றியது. மாயாஜாலம் நிறைந்தது இந்த உலகம். பொய்யை மெய்யென்று நம்பி வாழ்ந்துகொண்டிருக்கிறது. தற்காலத்தில் குழந்தை பராமரிப்பென்பது மடியில் நெருப்பைக் கட்டிக்கொண்டிருப்பது போன்றதே. நாம் குழந்தை வளர்ப்பில் அன்புடனும் மிக விழிப்புடனும் இருக்கவேண்டும். இச் செயற்பாட்டில் அவசியம் கண்டிப்பு பொதிந்திருக்க வேண்டும். ஆகவே இதை சீராகக் கைக்கொள்ள வேண்டும். இதில் தளர்வு ஏற்படின் திரும்பவிட்ட இடத்திலிருந்து மீள கடும் பிரயத்தனம் தேவைப்படும். குழந்தைகளிடம் சகோதரத்துவம், ஒற்றுமை, விட்டுக்கொடுத்தல் இவற்றின் அவசியத்தை ஊட்டிவிட வேண்டும். சந்தர்ப்பம் வரும் வேளைகளில் எல்லாம் சிறு கதைகள் மூலம் இதன் தாற்பரியங்களை (தாதாமியம்) தெளிவாக விளக்க வேண்டும். கதைகள் காலம் காலமாக குழந்தைகள் நினைவில் நிலைத்து நிற்கும். அதுமட்டுமல்ல ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நீதி நூல்கள், திருக்குறள், பாரதியார் கவிதைகள், புராணக்கதைகள், மகாபாரதம், இராமாயணம் (சிறுவர்களுக்கானது) இவற்றையும் சொல்லிக்கொடுப்பது அவசியம். இவை வாழ்க்கை நெறியை மேன்மைப்படுத்தும். குழந்தைகள் இவற்றை விரும்பிக் கேட்பார்கள். அத்தோடு வாசிப்பது எழுதுவதன் முக்கியத்துவத்தையும் செயற்படுத்த வேண்டும். ஆதலால் சிறுபராயத்திலேயே இப் பழக்கங்களை கற்றுக்கொடுப்பது சிறப்பு.

இவற்றோடு ஆலயம் செல்வது, அங்கு சிறு பணிகள் செய்வது, கூட்டுப்பிரார்த்தனை, பஜனை முதலிய அறநெறிகளில் ஈடுபடுவதும் சமய ரீதியாகச் சிறந்தது. இவை செய்நெறியை வலுப்படுத்தும். அது மட்டுமன்றி உணவு, நீர், பணம், மின்சாரம் முக்கியமாக நேரம் இவற்றில் சிக்கனம் அவசியம். இவற்றைக் கடைப்பிடிப்பது உற்சாகப்படுத்துவதற்கு தட்டிக்கொடுப்பது இந்தப் புரிதலை குழந்தைப் பராயத்திலேயே அவசியம் பழக்கப்படுத்தி விடுவது மிக நன்று. பெற்றாராகிய நாமும் இத் தவறுகளைத் தவிர்ப்பது நன்று. தலையாய கடமையுங்கூட. தவறுமிடத்து பின் விளைவுகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும். இவ்வாறாக வளர்க்கப்படும் குழந்தைகளின் கிரகிக்கும் திறன் அதி அற்புதமாக பிரகாசிக்கும். நிச்சயமாக எதிர்காலத்தில் இவர்கள் சிறந்த அறிவாளிகளாக மெய்யுணர்வாளர்களாக திகழ்வார்கள் என்பது நிஜம்.

அடுத்து பக்தி என்பது மிக அவசியமானது. பக்தி என்பது முதன் முதலில் வீட்டில் தான் ஆரம்பிக்கின்றது. பெற்றார் பக்திநெறியில் வாழ்கின்றனர் என்றால் ஒரு வயதுக் குழந்தையானாலும் சரி முதலில் எல்லாவற்றையும் கண்ணால் பார்த்து உன்னிப்பாகக் கவனிக்கின்றது. அத்தனையும் பதிவாகியும் விடுகிறது. அந்த நெறியிலே வாழப் பழகிக்கொள்கிறது.

பக்தியை உணர்ந்துகொள்ள முதலில் இயற்கையை ரசிக்க வேண்டும். நேசிக்க வேண்டும். காற்று, வெளிச்சம், மழை இதில் எவற்றையும் நாம் பணம் கொடுத்துப் பெற வில்லையே. அதேபோல காடுவாழ் உயிரினங்களுக்கு உணவு சமைத்துக் கொடுக்கப்படுகின்றதா? இல்லை நோயென்று மருந்து குடிக்கின்றதா? இறைவன் அவைகளுக்காகவும் நமக்காகவும் மூலிகைகளைப் படைத்துள்ளார். விலங்குகள் நோய்களின் தன்மைக்கேற்ப ஏதும் உண்ணாது

*விழுவதெல்லாம் எழுவதற்குதானே தவிர அழுவதற்கு அல்ல.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டினி கிடக்கும். நம் வீட்டுப் பூனைகள்கூட சில வேளைகளில் உணவு உண்ணாது புல் வகைகளை சாப்பிடுவதைக் கவனித்திருப்போம். இதையேதான் சித்தர்களும் நமக்குக் கூறியுள்ளார்கள். "லங்கனம் பரம ஔஷதம்" (பட்டினி கிடத்தல்) என்று புத்தரும் செப்பினார்.

நாம் ஓய்வாக இருக்கும் நேரங்களில் எல்லாம் வானத்தின் அமைதி, சூரிய சந்திரனின் சூடு, குளிர், காற்றின் ஓசை, பறவைகளின் ஒலி, கடலின் ஆர்ப்பரிப்பு இப்படி இயற்கையை நம் சிந்தனைக்குள் ஓடவிட்டோமென்றால் எம்முள் ஓர் பரவசம் ஏற்படுவதை உணரமுடியும். இதுவே பக்திக்கு காலாகின்றது. நம் கண் முன்னே நமக்காகவே எல்லாம் கொட்டிக் கிடக்கின்றது. நம் ஊனக்கண்களுக்கு இது தெரியவில்லை. இவை பற்றிய புரிதல் இல்லா மலேயே நம் வாழ்க்கை ஓடிக்கொண்டிருக்கிறது. இந்த அறிவைப் பெற்றுக்கொள்ள கண்டிப்பாக நமக்கு ஒரு குரு, சத்சங்கம் அவசியம் தேவைப்படுகிறது. எமக்குள்ளே எழும் விசாரம், சந்தேகங்கள் நாமறிந்த கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ள இது ஒரு நல்ல வாய்ப்பாக அமையும். நல்ல விஷயங்கள் பகிரப்படும்போது நம்முள்ளும் நம்மைச் சுற்றியும் நல்லதொரு காந்த அலை பரவுகிறது. இதனால் நம் எதிர்மறை எண்ணங்கள் மறைய வாய்ப்புண்டு. அப்போ நாம் நல்ல காரியங்களைச் செய்வோம். அதில் நம்முள்ளே ஒரு திருப்தி தெரிகிறது. அமைதி நிலவுகிறது. இந்த அமைதியானது எம்மைத் தியானத்துக்கு இட்டுச்செல்லும்.

இவ்வாறாக நாம் வாழும் வாழ்க்கையின் இரகசியத்தை அடிப்படைக் காரணிகளைக் கண்டறிந்து அதன்வழி ஒழுகக் கற்றுக்கொண்டு விட்டோமேயானால் எங்கும் எதிலும் எப்பவும் நிறைவையே காண்போம். நம் மக்கள் நலம் பெறவும் நன்நெறியில் வாழவும் வழி சமைப்போம். பக்தியை வளர்ப்போம். முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் - முயற்சி திருவினையாக்கும்.

## நற்பேறுகள் தந்திடும் சந்நிதி வேலன்

செல்வச் சந்நிதி வேலனின்
இறைசொல் ஒன்று உண்டு - அது
எந்நிதியும் தந்திடுவான்
செல்வச் சந்நிதியான் - அங்கு
நற்பேறுகள் தந்திடும்
வெற்றிவேல் அமர்ந்திடும் பெரும் தலம்
அடியவர் பசிபோக்க தன்னருகே
எண்ணிலா மடங்கள் அருகே
சந்நிதியான் ஆச்சிரமம் - எனும்
பெருங்கோயில் உண்டு
பெரு முதல்வர் வேலனின் அடியவர்
மோகனதாஸ் சுவாமிகள் அளித்திடும்
தொண்டுகளோ முருகனின் இறையருவி
வாருங்கள் அங்கே உவகை பெற்றிடுவோம்

-நாகலிங்கம் தங்கவேல்-

*தோல்வியின் அடையாளம் தயக்கம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டத்தக்கது அறிவோய் நீ!

– திரு செ. பாலச்சந்திரன் அவர்கள் –

எல்லாச் சமயங்களையும் தன் அங்கங்களாகத் தழுவிக்கொண்டு நாடு, மொழி, குலம், செல்வம், வறுமை முதலிய வேறுபாடுகளை நோக்காது எல்லா உயிர்களையும் இறைவன் திருவருள் நெறியில் செலுத்தவல்ல உலகத் தாய்ச் சமயம் சைவசமயம் ஆகும். சிவபெருமான் முதற்கண் நிறுவிய தொன்மைச் சமயம் ஆகும்.

"சிவநெறி வையத்துளார்க்கு வகுத்து வைத்தானே"

- திருமூலர்.

சைவமும் தமிழும் அத்துவிதமானது. எனவேதான் செம்மையான சிவந்த மேனியைப் போல தமிழ்மொழியும் செம்மொழியாகும். பன்னிரு திருமுறைகளும் முருகப்பெருமானின் பன்னிரு திருநயனங்களுக்கும், பன்னிரு திருக்கரங்களுக்கும் ஒப்பானவை. பன்னிரு திருக் கரங்களாலும் வாரி வழங்கும் வள்ளல் முருகப்பெருமான். திருமுறைகளும் அப்படியே. அடியவர்கள் கேட்டவற்றை எல்லாம் வாரி வழங்குவன; நோய் நீக்குவன; இடர் களைபவை; ஈற்றில் வீடுபேற்றையும் வழங்கவல்லன. "மாதங்களில் சிறந்தது மார்கழி" என்பார் கிருஷ்ண பரமாத்மா. ஏன் என்றால் சகல ஆலயங்களிலும் (சிவாலயங்கள்) திருவாசகம் ஓதப்பெறும். குறிப்பாக திருவாதிரை நட்சத்திரத்தை இறுதியாகக் கொண்டு முதல் பத்து நாட்களும் திருவெம்பாவை மட்டும் ஓதப்பெறும். வைணவ ஆலயங்களில் திருப்பாவை ஓதப்பெறும். திருவாசகம் என்பதன் பொருள் தெய்வத் தன்மையுடைய வாசகம் என்பதாகும். இந்நூலின் சிறப்புக் கருதியன்றோ சிவபெருமான் அந்தணர் உருவில் சிதம்பரத்துக்கு வந்து மணிவாசகரை நோக்கி

ஆதியை மன்றுளாடும் ஐயனை அன்பினாலே
ஓதிய தமிழின் பாடல் உள்ளவையோத வெண்ணி
மாதுயர் அகலவின்னே வந்தனம் எழுதல் வேண்டும்
வேதியர் பெருமானின்று விளம்பிடும் விளங்க என்றார்.

(திருவாதவூரடிகள் புராணம்)

பொற் சபையில் பஞ்சகிருத்திய நடனமாடும் ஆதிப்பிரானாகிய ஐயனை நோக்கி நீர் ஓதிய திருப்பாடல்களை நானும் ஓதுவதற்கு எண்ணி வந்தோம். இதனால் மாதுயர் அகலும் என்று வேதியராக வந்த சிவனே குறிப்பிடுகிறார். திருவாசகம் முழுவதையும் ஓது வதன் பயன் இப் பாடலால் குறிப்பாக இருதினை, ஐம்பால், மூவிடங்கட்கும் பொதுவாகும். தாம் இறைவன்மீது பாடிய பாடல்கள் அனைத்தையும் மெய்ஞ்ஞான வாசகமாக உவந்து சொன்னார். அம்பலத்தாடும் ஐயர் தம் செங்கையில் ஏடு ஏந்தி தெளிவாகத் திருவாசகத்தை எழுதினார். எழுதிய அந்தணர் உருவில் வந்த இறையனார் கோவை பாடுதல் வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றார். நிலைபெற்ற தவத்தால் மேம்பட்ட திருவாதவூரடிகள் அதற்கிசைந்து மனமுவந்து "திருவளர் தாமரை..." என்று எடுத்துத் திருச்சிற்றம்பலக் கோவை பாடியருள சபாநாயகர் அவ்வடிகளுக்கு எதிரே இருந்து எழுதி முடித்த பின்னர் புத்தகத்தையும் கொண்டு மின்னல் போல மறைந்தார். திருவாதவூரடிகள் எழுந்து எங்கும் ஓடி, ஓடி தேடினார். அவரைக் காண வில்லை. வந்தவர் மன்றுள் ஆடும் ஆதி என்று அறிந்துகொண்டார். சிவபெருமான் திருவாத வூரரின் நல்ல தவத்தை உணர்த்தியருளுவதற்காக தில்லையம்பலத்தில் உள்ள பஞ்சாக்கரப் படியிலே வைத்தருளினார் திருவாசகமுறையை. பூசை செய்யும் அந்தணர்கள் வந்து கண்டனர். இந்நூலை. இதென்ன புதுமை என்று அதிசயித்தனர். அர்த்தசாமப் பூசை முடிந்த பின்னர் திருக்கதவம் திருக்காப்பிட்ட பின்னர் அரிபிரமேந்திராதி தேவர்களும் உட் பிரவேசிக்கக்கூடாது; முடியாது. எனவே இது தெய்வீகம் என்று தில்லைவாழ் அந்தணர் நிச்சயம் செய்தனர். நூலின் முடிவிடத்தில் உயர்ந்த வாதவூரன் பாடிட, எழுதிய இவ் வெழுத்தானது அழகிய சிற்றம்பலமுடையானது கையெழுத்தாம். என்று அந்தணர் பெருமக்கள் இவ் 1056 பாடல்களும் கொண்ட வீட்டு நெறிக்கு இனிச் சிவநூல் இதுவேயாம் என்று திரு வாசக திருக்கோவையார் ஆகிய எட்டாம் திருமுறை மெஞ்ஞானிகளால் ஏற்கப்பட்ட நூலாம். அழகிய சிற்றம்பலமுடையான் என ஒப்பம் இடப்பட்டது மட்டுமல்லாது தமது சித்திரச் செங்கையினால் மைக்காப்பிடப்பெற்ற (முத்திரை) பெருமையும் உடைய நூல் எட்டாம் திருமுறையாகிய திருவாசகம், திருக்கோவையார் என்பனவாம். "கையிலே வெண்ணெய் இருக்க ஊரெல்லாம் நெய்க்கு அலைந்த கதைபோல" என்ற பழமொழிக்கு ஒப்பாகத் திரு வருட் துணையினால் பெறுதற்கரிய பேறாக இந்நூல்களைப் பெற்றும், அவற்றை உரிய முறையில் ஓதாமல் வாழ்நாளை வீணாள் ஆக்குகின்றோம். இது சரியா? சைவப்பெருமக்களே! தமிழ் மூதாட்டி ஔவையார்,

"ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்
ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்"

என்று அறிவுரை கூறியுள்ளார்.

கிடைத்தவற்றைப் பயன்படுத்திச் சிவ புண்ணியப்பேறை பெறத் தெரியாதவர்களாக நாம் இருக்கலாமா? நாம் தமிழிலே பன்னிரு திருமுறைகள், பதினான்கு மெய்கண்ட சாஸ் திரங்கள் என்பவற்றையும் புராணங்கள் ஆகிய பொக்கிஷங்களையும் வைத்துக்கொண்டு விழலுக்கு இறைக்கின்றோம். வீண்பொழுது போக்குகின்றோம். சமயம் என்ற பெயரில் சண்டை இடுகின்றோம். ஆலயத்தின் பெயரால் முட்டி மோதுகின்றோம். ஆன்மா லயப்படும் இடம் ஆலயம். அங்கே "நான்" "எனது" என்ற கோஷத்துக்கு இடம் கொடுக்கலாகுமா? சிந்தியுங்கள் சைவப்பெருமக்களே! உதாரணத்துக்கு மோகனதாஸ் சுவாமிகளைப் பாருங்கள். "என் செயல் எதுவும் இல்லை. சந்நிதியான் அள்ளித் தருகின்றான். நான் அதை சிவார்ப்பண மாக செய்கின்றேன்" என்று கூறும் பக்குவம் எங்கள் எல்லார்க்கும் ஒரு முன் உதாரணமாக இருக்கவேண்டும். அதை எல்லாரும் பின்பற்ற வேண்டும். மணிவாசகப் பெருமான்கூட தமது "திருஏசறவு" என்ற பதிகத்தின் இறுதிப் பாடலில் "நானேயோ தவஞ் செய்தேன் சிவாயநம

*புத்தகங்களைவிட அனுபவமே அதிக சாதனை புரிகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப் பெற்றேன்...." எனப் பாடுகின்றார். இது மட்டுமா திருவாசகத்தின் இறுதிப் பதிகமான அச்சோப் பதிகத்தின் இறுதிப் பாடல் என்ன கூறுகின்றது.

செம்மை நலம் அறியாத திரடரொடுந் திரிவேனை
மும்மை மலம் அறுவித்து முதலாய முதல்வன் தான்
நம்மையும் ஓர் பொருளாக்கி நாய்சிவிகை ஏற்றுவித்து
அம்மை யெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

என்று உருகி உருகிப் பாடிப் பரமபதமாகிய சிவனுடன் ஐக்கியமாகி மறையவர் காண மறைந்தவர்.

முக்கியமாக எமக்கு வழிகாட்டிய பண்ணிசை வல்லாளர்கள் திருஞானசம்பந்தன், அமரராகிய அ.இ. திருமுறை மன்றத் தலைவர் பண்டிதர் வ. பேரின்பநாயகம் ஆகியோர் திருவாசகத்தை உருகிப் பாடுவது அல்லாது தாளமிட்டு ஓதுவது முறையல்ல எனப் பல உதாரணங்களுடன் கூறினர். அதை இங்கு ஞாபகமூட்ட விரும்புகின்றேன்.

திருவாசகத்தின் திருச்சதகம் என்ற பக்திவைராக்கிய விசித்திரப் பகுதியில் மெய்யுணர்தல் என்ற பகுதியில் "மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார் கழற்கென்..." என்ற பாடல் உருகி உருகிப் பாடி மெய்யுணர்தல் வேண்டும் எனக் கூறுகிறது.

"நாடகத்தால் உன்னடியார் போல்..." என்ற பாடலின் இறுதி வரியில் "... நின்றுருகத் தந்தருள் எம் உடையானே" என்று குறிப்பிடுகிறார்.

ஆத்மசுத்தி என்ற திருச்சதகப் பகுதியில் வரும் முதல் பாடலில் "ஆடுகின்றிலை கூத்துடையான் கழற்கன்பிலை என்புருகிப் பாடுகின்றிலை..." என்றும் மணி வார்த்தையாலும் அறியலாம்.

திருவாசகத்தில் 39ஆம் பதிகம் "திருப்புலம்பல்" அப் பதிகம் குறிப்பிடும் வரி "உற்றாரை யான் வேண்டேன்..." என்று ஆரம்பித்து ".... உன் குரை கழற்கே கற்றாவின் மனம் போலக் கசிந்துருக வேண்டுவனே" என்று முடிகின்றது.

திருவாசக 33ஆம் பதிகம் குழைத்தபத்து. அதிலே மாணிக்கவாசக சுவாமிகள் குழைந்து குழைந்து தன் ஆத்மாவை நிவேதனம் செய்கிறார்.

"வேண்டத்தக்கது அறிவோய் நீ!
வேண்ட முழுதுந் தருவோய் நீ..."

இவ்வாறு உருகி உருகி வேண்டினால் சிவானுபூதி கிட்டும். இது திண்ணம்! இதையே வேற்றுநாட்டு வேற்றுமத அன்பர் மணிவார்த்தையில் மயங்கினார். அதன் வெளிப்பாடாகத் "திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்" என்று தன்னியல்பு நிலையிலே விளக்குகின்றார். பெரும் தவப்பேற்றின் காரணமாகச் சைவர்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் திருமுறைகளை ஓதவேண்டும். அன்போடு ஓதவேண்டும். "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி..." ஓத வேண்டும். "மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து" ஓத வேண்டும் ".... பேசப் பெரிதும் இனியாய்...." என்று ஓதவேண்டும். "கற்றாவின் மனம் போலக் கசிந்து உருகி ஓத வேண்டும். "சகல ஆலயங்களிலும் நாம் ஓதவேண்டும். குறிப்பாகத் திருவாசக முற்றோதல்

*கோபத்திற்குக் கொடுக்கும் மரியாதையை யாரும் புன்னகைக்குக் கொடுப்பதில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் பயனைக் கொடுக்கவல்லது. ஓதும் அடியவர்களுக்கு உறுதுணையாக இருப்போம். இதனாலன்றோ ஓதும் அன்பர்களை "ஓதுவார் மூர்த்திகள்" என்று தம் "திருமுறைப் பெருமை" என்ற கட்டுரையில் விசேடித்துக் குறிப்பிட்டுள்ளார் கந்தரமடம் 'ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பண்டிதர்' அவர்கள். "வைகலும் எண்ணில் நல்ல கதிக்கு (சிவகதி) யாதுமோர் குறைவிலை.

"ஓம் நமசிவாய"

கண்டவரும் வியக்குமாறு
நீண்ட பணியாற்றி வரும்
தொண்டைமானாறு சந்நிதியான்
ஆச்சிரமமே வாழி,
கொண்ட பல்லறம் வேறெங்குமில்லை
கோடியெனப் பல்கிப் பெருகவே,
நிண்டு தழைக்கும் பூவரசுபோல
நீளுலகமே வந்து பாரீர்.

நாம் படிக்கின்ற காலத்தில் இப்படி
நமக்கு ஒரு ஆச்சிரமம் இல்லையே?
சோம்பேறிகளாக நாம் இல்லாதபடியினால்
செருப்பில்லாமலேயே வீதியில் நடந்தோம்
ஓம் முருகா! நீ அன்று எமக்காய் இரங்கியிருந்தால்
ஓடோடி சந்நிதிக்கு நடந்தே வந்திருப்பேன்,
மேம்பாடடைய இனியும் மெத்த வரமுண்டு,
மிகவும் அற்புதமானது சந்நிதியான் ஆச்சிரமம்.

ஆச்சிரமம் ஒரு அரசாங்கம்
அனைவருக்கும் சம உரிமை
பேச்சுகள் ரொம்பக் குறைவு
பெரும் புகழில்லை அங்கு
மூச்சிலும் பேச்சிலும் எழுத்திலும்
முழுவதும் அறம் ஒன்றேதான்,
ஆச்சரியமான ஆச்சிரமப் பணிக்கு
அகிலம் தலை வணங்குகிறது.

நான், எனக்கு, என்னுடையது என்றில்லாமல்
நல்லவேளை ஒரு கோயில் கட்டாமல்
பான்மைதரு வாழ்வுக்கு வரமீயும் அரிய
பல தொண்டுகளில் ஆச்சிரமம் பலே!
கோன்முறை அரசுபோல குடிதனைப் பேறாக்கி
குன்றென உயர்ந்து நிற்கும் பீடம்,
வான்முகில்போல வளந்தர முருகனின்
வாழ்வுக்கு இது சரணாலயமே!

- கே.எஸ். சிவஞானராஜா -

*இழந்த அனைத்தையும் மீட்டுவிடலாம் நம்பிக்கையை இழக்காதிருந்தால்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவத்கீதையின் தத்துவம்

## அத்தியாயம் - 11

(தொடர்ச்சி...

## தியான யோகம்

– திரு பூ. சோதிநாதன் அவர்கள் –

### 14) ஆசையே தியானத் தடை

கனவு அனுபவத்துக்கும் நனவு அனுபவத்துக்கும் இடையே வித்தியாசம் இருப்பது போல அந்த மனவிழிப்பின் அனுபவத்திற்கும் ஓர் வித்தியாசம் உண்டு. இரண்டு கருத்துக் களையோ, இரண்டு பொருள்களையோ மனம் சிந்திக்காதுள்ள ஒரு நிலையே தூய தியானம் என்பதை நாம் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மனம் ஒரு பொருளில் இருந்து வேறொரு பொருளுக்கு அல்லது கருத்துக்கு எண்ணங்கள் தொடர்ந்து பாய்ந்து கொண்டு இருக்கும்போது எமது தியானம் பூரணமற்றது என்றும் நாம் தகுந்த தியானப் பொருளைத் தெரிவுசெய்யவில்லை என்றும் அறியலாம். இதனைத் தீர்ப்பதற்கான வழி ஒரு குருவை நாடிச் செல்லவேண்டியதே ஆகும். எனவே அதில் எங்கோ ஒரு பிழை இருக்கிறது. அங்கு நாம் திருப்தி செய்துகொள்ளாத ஆசைகளை உடையவர்களாக இருக்கின்றோம்.

### 15) ஆசைகளைக் குறைத்தல்

இந்த உலகத்தில் எந்த ஆசைகளும் இல்லாத மனிதர்கள் இருக்கிறார்கள் என்பது அதன் அர்த்தம் அன்று. ஒவ்வொருவரும் சில ஆசைகளை உடையவர்களாகவே இருக்கின் றனர். ஆனால் ஆன்மிகப் பாதையில் செல்பவரது கடமை தனது ஆசைகளைச் சாதகமான ஒரு வழியில் குறைத்துக்கொள்ள வேண்டும் என்பதே. ஒருவர் ஆசைகளுக்கான உந்துதலை எவ்வாறு குறைத்துக்கொள்ள வேண்டும் என்பதைக் குருவிடம் இருந்து மட்டுமே அறிந்து கொள்ள முடியும். ஏனெனில் மனிதர்கள் எல்லோருக்கும் ஒரேவிதமான ஆசைகள் இல்லை என்பதும், ஒவ்வொருவருக்கும் ஒரு குறிப்பிட்ட வகையான ஆசைகளே உண்டு என்பதும் அவரவர்களின் குறித்த அவ்வகையான ஆசைகள் எழுவதற்கான சூழ்நிலைகளுக்கு ஏற்ற முறையிலேயே அவற்றைக் கையாளவேண்டி இருக்கும் என்பதும் உண்மை ஆகும். எனவே எல்லோருக்கும் ஒருமித்துத் தீட்சையளிப்பது இயலாத காரியமாகும். நாம் ஆயிரக்கணக்கான மக்களுக்குத் தீட்சை அளிப்பதற்காகத் தெருக்களிலே நின்று சத்தமிட்டு எல்லோரையும் அழைக்க முடியாது. ஒரு வைத்தியர் தனது நோயாளிகள் ஒவ்வொருவருக்கும் பரிகாரம் அளிப்பதுபோல ஒவ்வொருவரும் கையாளப்படவேண்டியவர்களாக இருக்கின்றார்கள். எல்லா நோயாளிகளுக்கும் ஒரே குளிசையை அல்லது ஊசிமருந்தை ஒருமித்து வழங்கமுடியாது.

*சரியான வாய்ப்பு வந்தால் தெளிவாக சிந்தித்துச் செயலாற்றுங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16) இரகசிய மறை ஞானம்

ஒவ்வொரு சீடனும் தானே ஒரு சிறப்பான தனித்தன்மை வாய்ந்தவனாக இருக்கின்றான். எனவே குரு ஒரு சீடனின் மனதில் உள்ள நிலமைக்குப் பொருத்தமான கவனம் செலுத்தவேண்டியவராக உள்ளார். அதாவது ஒருவர் எந்த நிலையில் இருக்கின்றார் என்ற கோணத்தில் இருந்தே அவருக்கு வேண்டிய தீர்வை வழங்கவேண்டியவராக இருக்கின்றார். மிகவும் கடினமான பிரச்சினை எழும்போது நாமாகவே அதைத் தீர்த்துக்கொள்ள முடியாது. குறைந்த பட்சம் நாம் புரிந்துகொள்வதற்கு அப்பாலுள்ளதாக இருக்கும்போது அப் பிரச்சினையை நாமாகவே தீர்த்துக்கொள்ள முடியாமல் இருக்கும். எமது சொந்த ஆசைகளின் புதிரை எம்மால் அறிந்துகொள்ள முடியாமல் இருக்கின்றது. அத்துடன் நாம் தீர்த்துக்கொள்ளாத ஆசைகள் மட்டுமே தியானத்தின்போது இடையூறுகளாக வந்து கொண்டு இருக்கின்றன. ஆனால் ஆசைகளை தீர்த்துக்கொள்வது என்பது திருப்திகளில் திளைப்பது என்று எண்ணக்கூடாது. எனினும் திருப்தி என்னும் முறை அவசியமாக இருக்கும்போது அவ் வழியிலேயே சில ஆசைகளை நிறைவேற்ற வேண்டும். அவ்வாறு அவ்வழி அத்தியாவசியமாக இல்லாதவிடத்து யோக முறையைப் பின்பற்றி வேறு நுண்ணிய முறைகளால் அவற்றைப் பூரணமாக உணர்ந்து இல்லாமல் செய்யவேண்டும். இவை யாவும் நூல்களில் வாசித்து அறியமுடியாத விடயங்களாகும். அவ் வழிகள் இரகசியமானவை என்பதோடு ஆழமான மறைஞானம் மிக்கனவாயும் இருக்கின்றன. அது மட்டுமன்றி குறித்த ஒரு தனிமனிதனுக்குப் பொருத்தமான ஒரு வழியிலும் அவை மேற்கொள்ளப்பட வேண்டியனவாய் உள்ளன.

## 17) அசையாத ஒளிச்சுடர்

குறித்த தெரிவுசெய்யப்பெற்ற பொருளின்மீது மனதை உண்மையில் நிறுத்தி வைப்பதைக் காட்டிலும் யோகத்திற்காக ஒருவர் தன்னைத் தயார்ப்படுத்திக்கொள்ள அதிகநேரம் எடுத்துக்கொள்ள வேண்டும். அதனை விடுத்து "நான் தியானம் செய்யப் போகிறேன்" என்று திடீரெனக் கூறுவதில் எவ்வித பிரயோசனமும் இல்லை. இதில் உள்ள முக்கிய விடயம் என்னவெனில் நாம் தியானத்திற்கு ஆயத்தமாக இருக்கின்றோமா என்பதே ஆகும். அதனைப் பூரணமாக மனம் ஏற்றுக்கொள்ளுமா? மனதின் சில தேவைகளை அடக்கி அவற்றை ஆழ்மனதின் ஒரு பக்கத்தில் ஒதுக்கிவைத்துவிட்டு அவற்றின் வேண்டுதலுக்கு மனம் "இல்லை" என்று கூறக்கூடிய நிலைக்கு வந்துவிட்டதா? அந்நிலைக்கு மனம் வராவிட்டால் எமது அணுகுமுறையில் நாம் மிகமிகக் கவனமாக இருக்கவேண்டும். நாம் எம்மையும் எமது ஆசைகளையும் புரிந்துகொண்டு அவ் ஆசைகளை ஒன்றில் திருப்தி செய்வதில் அல்லது நீக்குவதில் வெற்றிபெற வேண்டும். அப்போதுதான் மனம் அலைபாயாது நிற்கும். அது எவ்வித காற்றும் இல்லாத இடத்தில் வைக்கப்பட்டுள்ள விளக்கின் ஒளிச்சுடர் அசையாது இருப்பதை ஒத்ததாகும். ஆனால் எம்மில் பலருக்கு அவ்வாறான ஒரு மனப் பாங்கோடு இருப்பது மிகக் கடினமாகும்.

*அறிவினால் அடையும் புகழ் ஒருபோதும் அழிவதில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18) ஒருவகை ஆனந்தம்

மனம் முற்றும் தான் தெரிவு செய்த தியானப்பொருளில் ஆழ்ந்து மூழ்கி இருக்கும் போது எமக்கு ஒருவகையான ஆனந்தம், ஒருவகைத் திருப்தி, ஒருவகை மகிழ்ச்சி வரும் என்று கீதை கூறுகின்றது. அவ்வாறாயின் எமது வாழ்வில் வரும் மிகக் கொடிய துன்பம்கூட எமது மனங்களை அசைக்கக்கூடிய ஆற்றல் உள்ளதாக இருக்காது. எனவே தியானத்தில் இருக்கும் அந்நேரத்தில் எமக்கு எந்தவிதமான துன்பமும் இருக்கமுடியாது. அவ்வேளையில், எல்லாம் அழகாகவே தோன்றும். அத்துடன் வாழ்வின் ஒவ்வொரு ஆசீர்வதிக்கப்பெற்ற விடயத்துக்கும் நாம் எம்மைச் சரிசெய்து கொள்வோம். அந்தவேளையில் எல்லோருமே எமக்கு நண்பராகிறார்கள்; நாமும் எல்லோருக்கும் நண்பராகின்றோம். அப்போது எல்லா வகையான துன்பம் தரும் மூலங்களில் இருந்தும் நாம் விடுபட்டவர்களாவோம். அத்துடன் அவ்வேளை ஓர் உயர்ந்த கருத்தின்படி நாம் சுதந்திரமாகத் தனித்து நிற்கக் கூடியவர் களாவோம். அந்நிலையில் துக்கங்களுக்குக் காரணமான "நான்" என்ற எண்ணம் அதி உச்ச அளவில் வென்றெடுக்கப்படுகிறது. நாமும் அவ்வேளையில் உயர்ந்த விரிவாக்கம் பெற்ற இருப்பில் திகழுவோம்.

## 19) சந்தேகம்

ஒரு ஒரே வாழ்வில் இந்த இலக்கை ஒவ்வொருவரும் அடையக்கூடியதாக இருப்போமா என்பது சந்தேகமே. ஏனெனில், இவ்வுலகில் உடலோடு நாம் வாழும்போது பலவகையான இடர்களுக்கும், பலவீனங்களுக்கும் ஆட்பட்டவர்களாகவே இருப்பதனால் அவ்வாறு இந்த ஒரு வாழ்விலேயே எமது இலக்கை அடைய முடியாதவர்களாக இருக்கின்றோம். யோகத்தின் குறிக்கோளையும், வாழ்க்கையின் குறிக்கோளையும் உடலோடு கூடிய இவ் வாழ்க்கை யிலேயே அடையமுடியும் என்று எவராலும் உறுதி கூறமுடியுமா? இதனாலேயே மனதில் ஒரு சந்தேகம் எழுகிறது. அவ்வாறு இந்த ஒரே வாழ்நாளில் அந்த இலக்கை ஒருவர் அடை வது சாத்தியமா, அதுவும் எனக்குச் சாத்தியமா என்பதே அந்தச் சந்தேகம் ஆகும். அந்தச் சந்தேகத்தையே அர்ச்சுனன் தனது போதகரான கிருஷ்ணனிடம் கேட்கிறான். ஒரு விசுவாசமுள்ள சீடன் வாழ்க்கை முழுதும் யோகத்தை முறையாகப் பயிற்சிசெய்து வந்தபோதும் அந்த இலக்கை அடையாது மரணிப்பானாயின் அவனுக்கு என்ன நிகழும் என்பதே அர்ச்சுனனது வினாவாகும். அதாவது மறுபிறப்பில் அப்படியான ஒருவனது நிலை எவ்வாறு அமையும் என்பதே அவனது வினாவின் அர்த்தமாகும்.

## 20) கிருஷ்ணனது பதில்

நாம் இப்பொழுது யோக வழியில் தியானத்தை மிகச் சிறந்த முறையில் பயிற்சி செய்து வருகிறோம் என்று கற்பனை செய்து பார்ப்போம். அதனை நல்ல விடயம் என்று உணருவோம். நாம் முழு முயற்சி செய்தபோதும் அதில் வெற்றி அடையாது கர்ம வினை யால் உடலைவிட்டு நீங்க நிர்ப்பந்திக்கப்படுகின்றோம். அவ்வாறாயின் எமது அடுத்த பிறவியில் எமக்கு என்ன நிகழும்? நாம் இவ்வாறு கற்பனை செய்வது போன்ற ஒரு நிலையிலேயே அர்ச்சுனன் தனது வினாவைக் கிருஷ்ணனிடம் முன்வைக்கின்றான். அதற்குப்

*பகிர்ந்த துன்பம் பாதியாகிறது. பகிர்ந்த இன்பம் இரட்டிப்பாகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகவானுடைய பதில் மிகவும் திருப்தி அளிப்பதாகவும், ஆறுதல் அளிப்பதாகவும் இருக் கின்றது. "யாரொருவர் மிகச் சிறிய அளவிலேனும் நல்லதைச் செய்கின்றாரோ அவர் அழிந்து போகமுடியாது" என்பதே பகவானின் அந்தப் பதிலாகும். அது கர்மா பற்றிய கருத்தின் மிக அழகான ஒரு பக்கமாகும். அதாவது ஒரு செயல் அதற்கு நிகராக அதனைத் தொடர்ந்துவரும் மறு செயல் என்ற கர்மவிதியின் அழகான ஒரு பக்கம் ஆகும்.

(தொடரும்...

---

ஞானி ஒருவர் ஒரு ஊருக்கு சென்றார். பலர் வந்து அவரை தரிசித்து ஆசி பெற்றுச் சென்றனர். இளைஞன் ஒருவன் வந்தான். சாமி எனக்கு ஒரு சந்தேகம் உங்களைப் போன்று பல ஞானிகளும் பெரியோர்களும் வந்து மனித குலத்திற்குப் பல அறிவுரைகள் சொல்லியுள்ளனர். ஆனால் இன்றும் மனிதன் தீய வழியில்தான் செல்கிறான். உங்களைப் போன்றவர்களின் அறிவுரைகளால் என்ன பயன்? என்று கேட்டான்.

ஞானி அவனிடம் சொன்னார், தம்பி நான் இன்னும் சில நாட்கள் இங்கேதான் தங்கி இருப்பேன். நான் இந்த ஊரை விட்டுச் செல்லும்பொழுது நீ கேட்ட கேள்விக்குப் பதில் சொல்கிறேன், அதற்கு முன் ஒரு வேலை செய். ஒரு கழுதையைக் கொண்டுவந்து இந்த கோயில் மண்டபத்தில் கட்டி வை நான் ஊரை விட்டுச் செல்லும்வரை கழுதை அங்கே கட்டி இருக்கட்டும், தினமும் இரவு அதற்கு உணவு வைத்துவிடு என்று சொல்லிவிட்டு அருகில் உள்ள சத்திரத்துக்குச் சென்றார்.

மறுநாள் காலை ஞானி அந்த கோயில் மண்டபத்திற்கு வந்தார். அப்பொழுது அந்த இளைஞன் அந்த கழுதையை சுத்தி இருந்த சாணத்தையும், அது மிச்சம் வைத்த உணவு குப்பைகளையும் சுத்தப்படுத்திக்கொண்டு இருந்தான். இவ்வாறு நான்கு நாட்கள் தொடர்ந்து நடந்தன.

அடுத்த நாள் காலை சுத்தப்படுத்திக்கொண்டிருந்த இளைஞர் கிட்டே வந்தார் ஞானி. தம்பி நீ தினமும் இந்த இடத்தை சுத்தப்படுத்தினாலும் கழுதை மீண்டும் மீண்டும் அசுத்தம் செய்து விடுகின்றதே, பிறகு ஏன் தேவை இல்லாமல் இந்த இடத்தை மீண்டும் மீண்டும் சுத்தம் செய்கிறாய்? என்று கேட்டார்.

அதற்கு அவன், என்ன சாமி எல்லாம் தெரிஞ்ச நீங்க இப்படி கேட்கிறீங்க? திரும்பத் திரும்ப அசுத்தம் ஆவுதுங்கிறதுக்காக இந்த இடத்தை சுத்தப்படுத்தாம இருக்க முடியுமா? என்றான்.

இதைக் கேட்ட ஞானி அப்போது சொன்னார், தம்பி அன்று நீ என்னிடம் கேட்ட கேள்விக்கு இதுதான் பதில். நீ இப்போது செய்யும் வேலையைத்தான் நானும் செய்து வருகிறேன். அசுத்தமான இடத்தை நீ மீண்டும் மீண்டும் சுத்தம் செய்வதுபோல, மனிதனை நல்வழிப்படுத்தும் செயலை எங்களைப் போன்ற பெரியோர்கள் இடைவிடாமல் செய்து வருகிறோம்.

இளைஞன் சாமி இதற்கு நிரந்தர தீர்வுதான் என்ன? என்று கேட்டான்.

அவர் உடனே அங்கு கட்டியிருந்த கழுதையை அவிழ்த்துவிட்டு விரட்டினார். பின்பு அந்த இளைஞனைப் பார்த்துக் கேட்டார், இனி இந்த இடம் அசுத்தம் ஆகுமா? என்றார். ஆகாது சாமி என்றான்.

ஞானி கூறினார் உன் கேள்விக்கு இதுதான் பதில். நீ செய்த வேலையைப் போல் நாங்கள் மீண்டும் மீண்டும் சுத்தப்படுத்திக் கொண்டு இருக்கிறோம். இப்பொழுது நான் செய்த வேலையைப்போல் என்று மனிதன் தன்னிடம் இருக்கும் தீய எண்ணம் என்ற கழுதையை வாழ்வில் இருந்து விரட்டி விடுகிறானோ, அப்பொழுதே எங்களின் சுத்தப்படுத்தும் கடமை முடிந்துவிடும். அதுவரை மனிதனை நன்நெறிப்படுத்துவது ஆன்மீகத்தின் கடமை என்றார்.

எனவே தீய வழியில் செல்லும் கடைசி மனிதன் திருந்தும் வரை நாமும் இந்த மாதிரி ஆன்மீகக் கதைகளைப் பகிர்வோம். நல்லதொரு சமுதாயத்தை உருவாக்குவோம்.

***ஆர்வமில்லாதவன் பெரிய காரியங்களை சாதிக்க முடியாது.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடக்கம் உயர்வு தரும்

– திரு சி. நற்குணலிங்கம் அவர்கள் –

அடக்கம் என்பது ஒருவனின் பண்பட்ட தன்மையைக் குறிக்கின்றது. எந்த நிலையிலும் நிதானத்தை இழக்காத உறுதியான தன்மையைக் குறிக்கின்றது. பண்பாக நடந்துகொள்ள வேண்டுமென்ற மனப்போக்கைக் கொண்டுள்ளது. மனிதர்களின் குணவியல்புகளில் அடக்கத் துக்கு எப்போதுமே முதலிடமுண்டு.

அடக்கமுள்ளவன் உயர்ந்த நிலையில் வைத்து போற்றப்படுவதற்கு பொருத்தமானவன். அமைதியுடன் கூடிய அடக்கம் வெற்றிக்கு நிச்சயமாக வழி. சாந்தமான அடக்கத்தால் வலிமை புதுப்பிக்கப்படுகிறது. அறிவுடையவர் அடக்கமாக இருப்பர். அடக்கம் ஒருவனுக்கு வாழ்வில் அமைதி, சாந்தம், திருப்தி, மகிழ்ச்சி, உயர்வு, உறுதி என்பவற்றைக் கொடுக்கின்றது. அடக்கத்தை வாழ்வின் ஏணிப்படியென ஒவ்வொரு மனிதனும் எண்ணி நடப்பானாயின் அந்த நாடே சொர்க்கமாக மாறிவிடும். அடக்கம் எனும் உயர்ந்த பண்பு அனைவருக்குமே பொதுவானது.

விட்டுக்கொடு விருப்பம் நிறைவேறும். மன்னிப்புக்கொடு தவறு குறையும். மனம் விட்டுப் பேசு அன்பு பெருகும். அடக்கமாக இரு வெற்றி நிச்சயம். அன்பை வெளிப்படுத்த யோசிக்காதே. கோபத்தை வெளிப்படுத்துமுன் அடங்குவதற்கு யோசிக்க மறந்துவிடாதே. அமெரிக்காவில் முதல் அரச தலைவராக ஜோர்ச் வாசிங்டன் 18ஆவது நூற்றாண்டில் அமெரிக்க குடியரசை நிறுவியவர்களில் முக்கியமானவர். ஒரு சமயம் நேரம் கழித்து அலுவலகம் வந்த தமது செயலாளரை அழைத்து தாமதத்துக்கு என்ன காரணம்? என்று கேட்டார். அதற்கு அந்த செயலாளர் காலதாமதம் ஆனதற்கு தன்னிடம் இருக்கும் கடிகாரம்தான் காரணம் என்று கூறினார். அதற்கு அரச தலைவர் அப்படியா இந்த தவறு நீடிக்காமல் இருக்கவேண்டுமானால் இரண்டில் ஒரு காரியம் உடனேயே நடந்தாக வேண்டும். ஒன்று நீர் வேறு கடிகாரம் வாங்கிக்கொள்ள வேண்டும். அல்லது நான் வேறு செயலாளரை அமர்த்திக் கொள்ள வேண்டும் என மிகவும் அடக்கமாக கூறினார். அன்று முதல் அந்த செயலாளர் தினமும் சரியான நேரத்துக்கு அலுவலகத்துக்கு வரத் தொடங்கிவிட்டார். இதுதான் அடக்கத்தின் மகிமை.

விவேகானந்தர் கூறியது போன்று "தன்னை அடக்கப் பழகியவன் வெளியில் உள்ள எதற்கும் வசப்படுவதில்லை". அடக்கத்தைக் கற்றுக்கொள்வதால் கட்டளையிடும் தலைமைப் பதவிகூட தானாகவே வந்து சேரும். இவ்வாறான சிறப்புமிக்கது அடக்கமாகும் மனிதன் மனிதனாக வாழவேண்டும். வாழும்போதே பல விழுமியங்களைக் கடைப்பிடித்து வாழவேண்டும். மனிதனை மனிதம் நிறைந்தவனாக வாழவைக்கும் விழுமியங்களுள் அடக்கம் முதன்மையானதாகும். அடக்கம் உடைய ஒருவனால்தான் பணிவாக நடந்துகொள்ள முடியும்.

*ஒரு அறிவாளி தனக்குள்ளே எல்லாவற்றையும் எதிர்பார்க்கிறான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவுக்கு உப்பு எவ்வளவு முக்கியமோ அதே போன்று நல்வாழ்வுக்கு அடக்கம் இன்றியமையாததாகும். அடக்கமுடைமை மனிதனுக்கு சிறந்த ஆயுதம். அடக்கமற்ற மானிடர் கொண்டுள்ள அறிவால், சமூகத்துக்குப் பயன் என்பது ஒருபோதும் ஏற்பட்டுவிடாது. அடக்கமற்றோர் செருக்குடன் நடப்பர். பிறர் தம்மை மதிக்கவேண்டும் என்பதற்காக தேவையற்ற விடயங்களில் தலையிட்டு தம் அறிவீனத்தை இனங்காட்டிக்கொள்வர். “மெல்லெனப் பாயும் தண்ணீர் கல்லையும் கரைக்கும்” என்பது பழமொழி. விடயங்களை மென்மையாக அணுகி ஆராய்வதும், பகைவர்களை நண்பர்களாக கருதும் உயர் பண்பும் அடக்கமுடையோருக்கே உண்டு.

ஆரோக்கியத்துடன் வாழ விரும்புகிறாயா? உணவோடு நீரைப் பருகாதே. கண்ணில் தூசி கசக்காதே. கழிக்கும் இரண்டையும் அடக்காதே. கண்ட இடத்தில் உமிழாதே. காதைக் குத்திக் குடையாதே. கொதிக்கக் கொதிக்கக் குடியாதே. நகத்தை நீட்டி வளர்க்காதே. பசிக்காவிட்டால் புசிக்காதே. வயிறு புடைக்க உண்ணாதே. வாயைத் திறந்து மெல்லாதே. வெற்றுத் தரையில் உறங்காதே. அடக்கமற்று செயற்படாதே.

அடக்கத்தின் சிறப்புப் புள்ளியாக வள்ளுவர் அடக்கம் உடைமை எனும் அதிகாரத்தில் “அடக்கம் அமரருள் உய்க்கும்” என்றார். அடக்கத்தை பெரும் செல்வமாக மதித்துக் காப் பாற்ற வேண்டும். அடக்கத்தைவிட ஆக்கம் தருவது இந்த உலகில் வேறு ஒன்றுமில்லை. அடங்கி நடப்பதுதான் அறிவுடைமை. அதை உணர்ந்து நடப்பவர்கள் பெருமையடைவதுடன் புகழப்படுவார்கள் என்பதை “செறிவு அறிந்து சீர்மை பயக்கும் அறிவு அறிந்து ஆற்றின் அடங்கப்பெறின்” எனும் குறள்மூலம் வள்ளுவர் விளக்கியுள்ளார். மற்றவர்களுடன் பண்பாகப் பேசி அடங்கி நடப்பவனின் தோற்றம் மலையைவிட வலிமையானதாகும். செருக்கற்ற அடக்கம் எல்லோர்க்கும் நன்மையே ஆக்கும். பதவி, செல்வம், கல்வி உடையவர்களுக்கு அடக்கம் ஒரு மேலதிக செல்வமாகும். ஐம்பொறி ஆசைகளையும் அடக்கி வாழ்வதால் அது ஏழு பிறவிகளுக்கும் பாதுகாப்பாகும்.

அடக்கம் என்பது பயந்து நடப்பதல்ல. மரியாதைக் குறைவுமல்ல. அது ஒருவகைப் பக்தி. அடக்கம் உடையவனை ஆண்டவன்கூட ஒருபோதும் கைவிட்டதில்லை. கைவிடவும் மாட்டான். வாழ்க்கையின் வெற்றிக்கு முதற்படி அடக்கமே. அடக்கம் அற்றவர்களை சமூகம் ஒதுக்கும், வெறுக்கும், மதிக்காது. அடக்கம் உள்ளவன் சமூகத்தால் அடையாளப்படுத்தப் படுவான். அவனுக்கு உதவுவதற்கு பலரும் தாமாகவே முன் வருவார்கள். வாழ்க்கையில் துணிவைவிட அடக்கமே அவசியமானதாகும். மனக்கசப்பற்ற, மன அழுத்தமற்ற, மன அமைதியுடனான, மகிழ்வான வாழ்க்கைக்கு அடக்கம் இன்றியமையாததாகும்.

அடக்கம் இல்லா உள்ளம் ஒரு பாழ்வீடு. வாழ்க்கை என்ற மலரில் அடக்கம் என்பது தேன் போன்றது. வாழ்வது முக்கியமல்ல. சிறப்பாக வாழ்வதுதான் முக்கியம். இதற்கு அடக்கம் அவசியம். புகழ் என்பது மனிதரால் கொடுக்கப்பட்டது. அதற்கு நன்றியுடன் இருக்கவேண்டும். அகம்பாவம் என்பது எமக்கு நாமே கொடுத்துக்கொண்டது. அதற்கு எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். ஆனால் திறமை என்பது கடவுளால் கொடுக்கப்பட்டது. அதற்கு அடக்கமாக இருக்கவேண்டும். அடக்கம்தான் முன்னேற்றம் தரும். அடக்கம்தான்

***தூய்மை, பொறுமை, விடாமுயற்சி இவையே வெற்றிக்கு அடிப்படை.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையாக வாழக் கற்றுக்கொடுக்கும். அடக்கமாக வாழ எமக்கு நிறைய துணிச்சல் வேண்டும். அது இருந்தால் நாம் நினைத்ததை சாதிக்க முடியும். அடக்கம் உடையவன் தாழ்வதும் இல்லை, அடக்கம் இல்லாதவன் வாழ்வதும் இல்லை. உன்னை மதிப்பவர்களிடம் வாழ்ந்து பேச வேண்டும் ஆடம்பரமாக வாழ்வதற்குக்கூட அதிகம் போராட வேண்டியது இல்லை. அடக்கமாக வாழத்தான் இறப்புவரை போராட வேண்டும். ஒருவன் அடக்கத்தை தன்னகத்தே இணைத்துக்கொண்டால் வாழ்வில் நிம்மதிதான். கல்வி கற்றால் அறியாமையை இழக்கலாம். உழைப்பால் வறுமையை இழக்கலாம். உறவுகளால் தனிமையை இழக்கலாம். ஆனால் அடக்கத்தால் எதிரிகளை இழந்து மகிழ்வாக வாழலாம்.

கட்டிளமைப் பருவத்தினர் அடக்கத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இப் பருவம் அறிவுக் கதவுகளை மூடி உணர்வுக் கதவுகளினூடாகப் போய்வரவே விரும்பும் பருவம். பதின்ம வயதினர் ஒரு பருவ மாற்றத்தின் பதட்ட நிலைக்கு உட்படுபவர்களாக உள்ளனர் என்பது உளவியலாளர் கருத்து. இளமை தொடர்பான உணவால் தம்மை ஒரு விசேட வகைக்குரியவர்களாக அடையாளப்படுத்த முயல்கின்றனர். அப்போது இவர்களது நடத்தைகள் பொது நியமத்திலிருந்து விலகி எதிர்பார்க்கப்படும் நடத்தைக் கோலங்களிலிருந்து முரண்படுகின்றனர். பாலியல், வன்புணர்ச்சி, போதைப்பொருள் பாவனை, குழுச் சண்டை, திருட்டு, ஆட்கடத்தல், துவக்குச்சூட்டுக் கலாசாரம் என இளையோர் பண்பாட்டின் எதிர் நிலைகளில் அவா கொண்டுள்ளனர். இவர்களது அகத்தடைகள் வெற்றி கொள்ளப்பட வேண்டுமாயின் இவர்கள் அடக்கம் உள்ளவர்களாக மாற வேண்டும். ஒரு பிள்ளை தனது சமூகத்தில் ஆளுமை உள்ள ஒரு பிரசையாக வளர அதற்குத் தேவை அடக்கம். இளை யோரை சமூகவலுப்படுத்த அடக்கம் தொடர்பான விழிப்புணர்வு அவசியம்.

அடக்கம் இன்மையால் இவை மட்டுமல்ல குடும்ப உறவில், உறவினர் உறவில் விரிசல் ஏற்படவும், குடும்பப் பிணக்குகள் தோன்றவும் வலுப்பெறவும் துன்பியல் வாழ்வு வாழவேண்டிய நிலை ஏற்படுகின்றது. அகிம்சைதான் வாழ்க்கையின் வெற்றிக்கு வழிகோலும். அடக்கம் உள்ளவனிடத்தில்தான் அகிம்சைத் தன்மை காணப்படும். எனவே வாழ்வில் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அடக்கத்தைக் கையாண்டு வாழப் பழக வேண்டும். அடக்கம் இல்லாததால் வாழ்வில் விழுந்து நொந்தவர்களைப் பார்த்தாவது பாடம் கற்றுக்கொள்.

அடக்கம் ஒருவனை உயர்த்தித் தேவருள் சேர்க்கும். அடக்கம் இல்லாதிருத்தல் பொல்லாத இருள் போன்ற தீய வாழ்க்கை வாழ நேரிடும். அடக்கத்தை உறுதிப் பொருளாகக் கொண்டு போற்றிக் காக்க வேண்டும். தன் நிலையிலிருந்து மாறுபடாமல் அடங்கி ஒழுகு வோனுடைய உயர்வு மலையின் உயர்வைவிட மிகவும் பெரிதாகும். ஒரு பிறப்பில் ஆமை போல் ஐம்பொறிகளையும் அடக்கியாள வல்லவனானால் அது அவனுக்கு ஏழு பிறப்புக்கும் பாதுகாப்பு அளிக்கும் சிறப்புடையது. அடக்கம் எனும் உயரிய குணம் ஒருவருக்கு சுவர்க்கத்தை அளிக்கும். அடக்கமின்மையோ கொடிய நரகத்தில் சேர்த்துவிடும். ஒருவருக்கு அடக்கத்தைவிட அவரின் உயிருக்கு காவலாய் அமைவது வேறு எதுவுமில்லை. பொதுவாக மற்றவர்களிடம் அகந்தையின்றி அடக்கமுடையவராக நடந்துகொள்ளும் பண்பு பணிவு

*பசி, உழைப்பு, வியர்வை இவை மூன்றும் பிணியைப் போக்கும் மருந்துகள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பிறிதொரு சொல்லால் உணர்த்தப்படுகிறது. அடக்கம் தன்னடக்கம், நாவடக்கம், பொறிகள் அடக்கம், புலனடக்கம் என்றெல்லாம் சொல்லப்படுகின்றன. கிரேக்க சிந்தனையாளன் சாக்கிரடீஸ், மனிதன் மேற்கொள்ள வேண்டிய முதல் நிலைப் பண்புகளாக தன்னடக்கத்தை யும், புலனடக்கத்தையும் கூறினார். தன்னைப்பற்றிய உயர்வு நினைவுகளை விட்டொழித்து விட்டால் அடக்கப்பண்பு வந்துவிடும். ஆசைகள் தோன்றி வளர்ந்தால் அடக்கமுடைமையை பெறுவது இயலாது.

## சூரனை வென்ற வீரனே வா சந்நிதிக்கு

சூரனை வதம் செய்து தேவரைக் காத்திட்ட
வீரனே சந்நிதிக்கு வா.

நாடுவோர் பாவமதை நீக்கிடும் வேலனை
தேடுவோமாற் றங்கரைத னில்.

பிறரின் பொருளை விரும்பா திருத்தல்
அறவர் இயம்பும் அறம்.

ஆதிசிவன் மைந்தனாம் ஆறுமுகக் கந்தனவன்
ஆதியந்த மில்லாத வன்.

முத்திதருஞ் சேவற் கொடியுடை யானையென்றும்
பக்தியுடன் பாடிப் பணி.

கடுஞ்சொல் லொருவர்சொல் வாராயின் திண்ணம்
முடிவில் அவர்க்கே முடிவு.

வாட்டமுற்று மாந்தர் வருந்துகின்ற வேளைதனில்
கேட்பதெல்லாம் ஈந்துமகிழ் வான்.

-சீ. சாந்தநாதன்-

## குருபூஜை தினங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| பெப்ரவரி | 19 | மாசி 07 | திங்கள் | கச்சியப்ப சிவாச்சாரியார் |
| பெப்ரவரி | 26 | மாசி 14 | திங்கள் | திருவள்ளுவர் |
| மார்ச் | 18 | பங் 05 | திங்கள் | நல்லைக்குருமணி ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் |
| மார்ச் | 18 | பங் 05 | திங்கள் | முருகேசு சுவாமிகள் |
| மார்ச் | 21 | பங் 08 | வியாழன் | யோகர்சுவாமி |
| மார்ச் | 28 | பங் 15 | வியாழன் | காரைக்காலம்மையார் |

*முதுமையின் சுருக்கம் முகத்தில். முயலாமையின் சுருக்கம் அகத்தில்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழித்துணை 80

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 அடுத்தவற்குத் தேவையென்று இருப்பது வேறாகும்
உங்களுக்குத் தேவையென்று இருப்பது வேறாகும்
எடுத்தற்கெல்லாம் நீர் அடுத்தவரை காட்டல் விட்டு
உங்களுக்குத் தேவையெதோ அதைத்தேடும் பெற்றிடுவீர்.

02 குருதி உள்ளவரை குற்றுயிரும் நிலைத்திருக்கும்
குருதி ஓடிவிட்டால் குற்றுயிரும் ஓடிவிடும்
மனிதம் உள்ளவரை மானிடமும் நிலைத்திருக்கும்
மனிதம் அகன்று விட்டால் மானிடமும் அழிந்துவிடும்.

03 புனிதம் என்பது பூசகர்கள் தருவதன்று
நமக்குள் நாமே உருவாக்கிக் கொள்வதாகும்
புனிதம் தோன்றுமட்டும் நமக்குநாமே குருவாவோம்
புனிதம் தோன்றிவிட்டால் பூசகரும் குருவாவார்.

04 நோய்நொடி பற்றிநாம் நினைத்தபடி இருப்பதுவே
நோய்நொடி தீராமல் இருப்பதற்குக் காரணம்போல்
ஏழ்மையையும் தாழ்மையையும் ஏற்றுநாம் நடப்பதுவே
ஏழ்மையும் தாழ்மையும் நிலைப்பதற்குக் காரணமாம்.

05 நடத்தையின் ஒழுக்கத்தால் நாய்வீட்டில் நிலைத்திருக்க
ஒழுக்கமிலாத் தன்மையினால் பூனையை நாம் அகற்றுதல்போல்
ஒழுக்கமுளோர் பேரோடும் புகழோடும் நிலைத்திருக்க
ஒழுக்கமிலார் தமையகற்றப் பலர் முயல்வார் கண்டறிவீர்.

06 வாய்க்கால்வழி நீர்கூட வழிகாட்டல் இருந்தால் தான்
பாத்திவழி பாய்ந்து அது பயிர்களுக்குப் பலன்தரல்போல்
வாழ்க்கையிலும் எல்லோரும் வழிகாட்டலினை ஏற்றால்தான்
வாழ்க்கையின் முழுமையை நாம் முடிந்தவரை வென்றிடலாம்.

*மற்றவர்களுடைய தவறுகள் நமக்கு நல்ல பாடங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 கைகள் இரண்டுமே இருந்திட்டால் போதுமதால்
கருமம் எதையுமே செய்திடலாம் என்றிராதீர்
செய்கின்ற கருமத்தில் விசுவாசம் இருந்தால்தான்
கைகளினால் செய்பவைகள் காரியத்தில் சித்திதரும்.

08 விழிப்புணர்வு கல்வியிலோ கலைகளிலோ இருந்திடலாம்
சாதி சமய விழிப்புணர்வு சாவுவரை தேவையில்லை
சாதி சமய விழிப்புணர்வு சங்கடத்தால் கோடேறும்
கல்விகலை விழிப்புணர்வு கற்றவர்கள் சபையேறும்.

09 நசித்திடும் போதிலெள்ளு எண்ணையாய் உயர்ந்தே போகும்
கரும்பது கற்கண்டாகும் இரும்புமோர் கருவியாகும்
அருந்தமிழ் கூட நாங்கள் நசித்திடக் கவிதையாகும்
மானிடம் மட்டும்வேறோ அதுவும் நசித்திட உயர்ந்தே போகும்.

10 மண்ணுக்குள் தோன்றிடும் மண்ணெண்ணை பின்னொருநாள்
மண்ணையும் அழித்தே மண்ணில் உள்ளதையும் அழித்திடல் போல்
எம்முக்குள் இருந்து தோன்றும் தீயவையும் பின்னொருநாள்
எம்மோடு எமதினையும் அழித்துவிடும் என்றறிவீர்.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

**காசுக்கட்டளை**
செந்திவேல் மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
தொ.இல – 0213219599, 0212263406

**காசோலை**
செந்திவேல் மோகனதாஸ்
க.இல – 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

**Swift code - BCEYLKLX 028 - 7342444**

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com

*ஒரு மனிதனின் பத்து விரல்களே அவனது சிறந்த நண்பர்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவதாரங்களும் அருளாளர்களும்

**– திரு இராம ஜெயபாலன்** அவர்கள் –

ஆன்மீகம் அடித்தட்டு மக்களின் வாழ்வியல் அனுபவங்களின் தொகுப்பாகவே வேதங்கள் மற்றும் புராண இதிகாசங்கள் வாயிலாகவும் பதிவாகியிருக்கின்றது. மேலும் மனித நாகரீக ஆரம்ப காலத்தில் ஆன்மீகம், நம்பிக்கை சார்ந்ததாக அறிவியல்களுக்கு அப்பாற்பட்டதாகவும் விளங்கியது. தவிர ஆன்மீகம் தனியுடைமையாகவும், தனித்தனியாக எல்லாக் கலைகளுக்கும் (தொழில்கள்) தனித்தனி தெய்வங்களும் இருந்தன. ஆனாலும் ஆன்மீக சக்திகளை பயன்படுத்தி போட்டி, பொறாமைகளையும் முரண்பாடுகளையும் வெற்றி கொள்ளும் ஆயுதமாகவும் பயன்படுத்தினார்கள்.

இதனால் மனிதர்களில் நாகரீகமடைந்த மனித கூட்டத்தினர் இயற்கை பற்றிய அறிவையும் இறைவன் பற்றிய அறிவையும் கற்பனைகளுடன் கலந்து அறிவை மேலோங்கச் செய்து, ஆன்மீக நம்பிக்கைகளை பின்னடைய வைத்தார்கள். முக்கியமாக வேதங்கள் இறைவனிடமிருந்து நேரடியாக வந்ததாகக் காட்டி வேத ஆட்சிகளை நிலைநிறுத்தினார்கள். ஆனால் சமய மறுமலர்ச்சிகள் ஏற்பட்டு வேத ஆட்சிகள் முடிவுக்கு வந்தது. இவ்வாறு சமய புரட்சிகள் ஏற்பட்டு ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்டபோது மேல்தட்டு மக்களும், அடித்தட்டு மக்களாக மாற்றமடைந்தனர். இவ்வாறான காலத்தில் வியாச முனிவரால் வேதங்களும் மகாபாரதமும் பதிவு செய்யப்பட்டன. மேலும் வியாச முனிவரின் தந்தையார் ஒரு பிராமணராக இருந்தபோதும் தாயார் ஒரு கரையாரப் பெண்ணாவார்கள். இவ்வாறு வியாச முனிவர் பிராமணராக இருந்தபோதும் அடித்தட்டு மக்களின் வாழ்வாகவே மகாபாரதக்கதையூடாக ஆன்மீகத்தை உயர்வாகப் பதிந்துள்ளார். உதாரணம் இடையரான ஸ்ரீ கிருஷ்ணரை உயர்வாகக் காட்டி பிராமணரான குசேலரை ஏழையாகக் காட்டி ஸ்ரீ கிருஷ்ணரிடம் அருள் பெறுவதாகவே காட்டியும் உள்ளார். மேலும் இராமாயணத்தை எழுதிய வால்மீகியும் ஒரு வேடுவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. சிலர் வால்மீகியின் வழித்தோன்றல்கள் தான் பிராமணராக தவறாக விளங்கக்கூடும். ஆனால் வால்மீகி எழுதிய இராமாயணத்திலேயே பிராமணர்களும் சத்திரியர்களும் பல்வேறு பாத்திரங்கள் வாயிலாக காட்டப்பட்டும் உள்ளனர். முக்கியமாக தசரத மன்னன் ஆன்மீக முனிவருக்கு பயந்தவராகவும், தவிர ஒரு பிராமணனின் சாபத்தாலேயே அவருக்கு புத்திரசோகம் ஏற்படுவதாகவும் காட்டப்பட்டுள்ளது. மேலும் இராமன் கூட, அனுமானின் உதவியாலும் விபிசனனின் உதவியாலுமே இராவணனை வெற்றி கொண்டதாகவும் காட்டப்பட்டும் உள்ளது.

இந்தவகையில் ஆன்மீக அவதாரங்களையும் அருளாளர்களையும் அறிவியல்களுக்கு அப்பாற்பட்ட விதமாக நம்பிக்கை சார்ந்ததாகவும் எழுதுவதே இந்த கட்டுரையின் நோக்கமாகும். எவ்வாறாயினும் அவதாரங்களுக்கு இயற்கை சார்ந்த இறைவன் சார்ந்த அறிவியல் உண்மைகள் இருந்தாலும் அவைபற்றி தனியான கட்டுரையில் பின்னர் பார்க்கப்படும். பலியிடுதல்களில் இருந்துதான் ஆன்மீக நம்பிக்கைகள் முதலில் தோற்றம்பெற்றது. விலங்கு பறவைகளை

*பொறுப்புமிக்க ஒரு தந்தை நூறு ஆசானுக்கு சமம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமல்ல மனிதர்களும் ஆரம்ப காலத்தில் பலியிடப்பட்டார்கள். பின்னர் மனிதர்களை பலியிடுதல் நாகரீக வளர்ச்சியின் காரணமாக கைவிடப்பட்டது. இவ்வாறு மனிதர்களை பலியிடுவது நிறுத்தப்பட்டாலும் கடவுளுக்கு மனிதர்களை நேர்ந்துவிடும் பழக்கம் இருந்தது. இவ்வாறு கடவுளுக்கு நேர்ந்து விட்டவர்களே முனிவர்களாகவும் ரிஷிகளாகவும் துறவிகளாக வும் ஞானிகளாகவும் மேலும் தேவரடியார்கள் ஆகவும் பல்வகையில் உருவானார்கள்.

எவ்வாறாயினும் எல்லா மனிதர்களுமே அவதாரங்கள்தான். ஒவ்வொருவரும் ஏதோ நோக்கத்திற்காகவே பிறந்து வாழ்ந்து இறக்கின்றார்கள். ஆனால் எல்லோருக்கும் தனித்தனியாக சமாதியமைத்து வழிபட முடியாமையால் அனைவரும் அவர்கள் சார்ந்த இயற்கை வழிபாடு களுடன் இணைக்கப்பட்டனர்.

இவற்றை குறியீடாகக் காட்டும் விதத்திலேயே தசாவதாரம் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. தவிர அவதாரக் கோட்பாடு வைணவ சமயத்தில் பதிவாகி இருந்தாலும், சைவ சமயத்தில் இவர்கள் அருளாளர்களாக காட்டப்பட்டும் உள்ளனர். முக்கியமாக நாயன்மார்களைக் குறிப்பிடலாம்.

நாயன்மார்கள் எல்லா வர்க்கத்திலும் (வர்ணம்) எல்லாச் சமூகங்களில் இருந்தும் ஆண்டான் அடிமைகளில் இருந்தும், தீண்டாமை இருந்த காலத்திலும் தீண்டாமையின் குறியீடாக நந்தனாருக்கும் எந்த வேறுபாடுகளும் இல்லாமல் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டும் உள்ளது.

முக்கியமாக நந்தனாருக்கு தனிக்கோவில் அமைத்து அவரை வேறுபடுத்தாது, அந்தணர்களால் பூசைசெய்யப்படும், தில்லையிலே முத்தியடைந்ததாகவே காட்டப்பட்டமை சிறப்பம்சமாகும்.

இவ்வாறு வைரவப் பெருமானுக்கும் அறுபத்து நான்கு கலைகள் உண்டு. சிலர் வைரவப் பெருமானை தாழ்த்தப்பட்டோர்கள் தெய்வமாகப் பார்ப்பது அவர்கள் அறியாமை ஆகும்.

எனவே நாங்கள்தான் புனிதர்கள். எங்களுக்குத்தான் அருள் கிடைக்கவேண்டும் என்று மார்புதட்டுவதை நிறுத்த வேண்டும். எங்கு உண்மை அன்பு இருக்கின்றதோ அங்குதான் அருள் இருக்கின்றது.

## சண்முகனை வேல் உருவில் வணங்குகின்றோம்

எத்தனை இடர்களைத் தீர்த்து வைக்கும் வேல்
என்றென்றும் எம் மனதில் குடி கொள்ளும் வேல்
புத்தம் புதிதான பாடல் (நெஞ்சில்) புனைய வைக்கும் வேல்
புகழ் பூத்து பலநூறு ஆண்டுகள் நிலைத்து நிற்கும் வேல்
கத்து கடல் அருகோடு இருந்து (என்றென்றும்) காத்துநிற்கும் வேல்
கடவுள் பக்தி கொண்டோரைத் தினம் காண்கின்ற வேல்
சக்தி உமை தாய் கொடுத்த அதிசக்தி வாய்ந்த வேல்
சண்முகனே வேலாகி நின்று என்றும் கணிக்கின்ற வேல்.
செல்வச் சந்நிதி வேல் இது.

-சின்னப்பு தனபாலசிங்கம்-

*நேரத்தைப் பயன்படுத்துங்கள். அது உங்களைப் பெருமைப்படுத்தும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகள்

(தொடர்ச்சி...

– திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் –

## செல்லப்பா சுவாமிகள் மொழிந்த மகா வாக்கியங்கள்

செல்லப்பா சுவாமிகள் தேகாபிமானம், உலகியல் ஆசாபாசங்கள் அனைத்தையும் விட்டொழித்து சுதந்திரராக ஞான நாட்டங்கொண்டும் சித்தத்தை நல்லைக் கந்தன்பால் வைத்துக் கந்தனுடன் உரையாடியும், உறவுகொண்டும் வந்த காலத்தில் அவரின் திரு வாயிலிருந்து அவ்வப்போது அருளும் பொருளும் நிறைந்த அதேவேளை அறியாமை இருளையும், தெருளையும் அகற்றி ஞான ஒளியை உள்ளத்தில் வீசக்கூடிய மகாவாக்கியங்கள் வெளிவந்தன. பக்குவமுள்ள சீடன் ஒருவன் வருவான்; அவனிடம் இம் மகா வாக்குகளை முதுசொம் ஆகக் கையளித்து; அச்சீடன் மூலம் அவற்றைப் பொதுச்சொத்தாக உலகத்தவர் யாவருக்கும் கிடைக்கச் செய்யலாம். எண்ணியிருந்தவேளை சிவயோக சுவாமிகள், சீடன் ஆகச் செல்லப்பாச் சுவாமிகளுக்கு வாய்க்கப்பெற்றார். அவரின் மனத்தில் பதிந்தவையாவும் பிற்காலத்தில் நற்சிந்தனைப் பாடல்களாக உருப்பெற்று உலகில் பல்லாயிரவர் கருத்தைக் கவர்ந்தன.

செல்லப்பாச் சுவாமிகள் தமது திருவாயிலிருந்து மலர்ச்சிபெற்று வெளிவந்த மகா வாக்கியங்களுக்கு அருள் கொடுத்தார். அவரின் சீடர் அவற்றை மொண்டு பொருள் கொடுத்தார். தாம் அருளிய நற்சிந்தனைப் பாடல்கள் வாயிலாக, "மேன்மைகொள் சைவநீதி" ஆக விளங்குகின்ற மகா வாக்கியங்களின் அருமை பெருமைகளை சிவயோக சுவாமிகள் உலகறியச் செய்தார். அம் மறை வாக்குகள் இன்றும் மக்கள் உள்ளங்களில் வாழ்கின்றன என்றும் சிரஞ்சீவியாக வாழும் தன்மையன்.

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப; எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்"

-திருக்குறள் 666.

எண்ணியவர் குருநாதர் செல்லப்பா சுவாமிகள். குருநாதர் எண்ணியவற்றை எண்ணியவாறே செயல் ஆற்றுவதில் திண்ணியராக உறுதியுடையவராக இருந்தவர் அவரின் உத்தமசீடர் சிவயோக சுவாமிகள். எண்ணியார் தம் எண்ணத்தில் திண்ணியார் ஆக விளங்கினார். அவரின் சீடர், தம் குருநாதர் எண்ணியபடியே செயல் ஆற்றுவதில் திண்ணியார் ஆகச் செயற்பட்டார். கருமம் நிறைவேறியது.

*அறிவும் ஒழுக்கமும் வாழ்க்கையின் இரு சக்கரங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒரு பொல்லாப்பும் இல்லை"
"முழுதும் உண்மை"
"நாமறியோம்; ஆரறிவார்"
"எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்"
"அப்படியேயுள்ளது"
"எல்லாம் செப்படி வித்தை"

செல்லப்பாச் சுவாமிகள் நல்லூர்த் தேரடியில் தவம் செய்து, கண்டெடுத்த நன் முத்துக்கள் ஆக விளங்குவன மேற்படி மகா வாக்கியங்கள் ஆகும். அவை உபநிடதங்கள் போன்ற வேத அருள் வாக்குகள். ஆழ்ந்த மெய்ப்பொருள் கொண்டவை. உலகோர் உய்வுபெற உதிர்க்கப்பட்டவை. இம் மகா வாக்கியங்களைச் சீடரான சிவயோக சுவாமிகளின் செவிகளில் பதிவுசெய்தபின் செல்லப்பாச் சுவாமிகள் தாம் வந்த வேலையை முடித்துக்கொண்டார். இராம கிருஷ்ண பரமஹம்சர் தாம் தேர்ந்தெடுத்த சீடரான விவேகானந்தரிடம் தமது பணிகளை ஒப்படைத்தபின் அமைதி பெற்றமை ஆத்மார்த்த நிகழ்வு ஆகும்.

சிவயோக சுவாமிகள் மகா வாக்கியங்களை அன்பர்கள் இலகுவாகப் புரிந்து கொள்வதற்காக பல வகையான பிரபந்தப்பாடல்களை இயற்றி வழங்கியருளியுள்ளார். அப் பாடல்கள் பல்லாயிரவர் கருத்தையும் கவனத்தையும் தற்போது கவர்ந்து வருகின்றன.

## நல்லைக் கந்தன் குருவடிவம் தாங்கியமை

இறைவனே குருவடிவம் தாங்கி வந்து பக்குவம் எய்திய ஆன்மாக்களுக்கு அருள் செய்து ஆட்கொள்வான் என்பது சைவநெறியின் முடிந்த முடிபு. மாணிக்கவாசகர் வரலாறு மற்றும் பெரியபுராணம் போற்றும் மெய்யடியார்கள் வரலாறு இதற்குச் சான்று பகர்கின்றன. சிவயோக சுவாமிகள் குருவாகிய செல்லப்பாச்சுவாமிகளின் திருவருட்பார்வை கிடைக் கப்பெற்றமையினாலே பாசநீக்கம் பெற்று ஆன்ம விடுதலை அடைந்தார்.

செல்லப்பாச் சுவாமிகள் வடிவில் நல்லூரில் கோயில்கொண்டு அருளாட்சி புரியும் முருகப்பெருமானே குருவாகத் தேரடியில் எழுந்தருளிவந்து தம்மை ஆட்கொண்டார் என்பதை சிவயோக சுவாமிகள் தமது நற்சிந்தனைப் பாடல்கள்மூலம் தெளிவுபடுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

"நல்லூரான்; ஆசானாய் வந்தே அடியேனை ஆண்டுகொண்டான், போசானுபூதியென் பேறு"

"ஒரு நாமம், ஒருருவம் ஒன்றுமிலான் நல்லூரிற்
குருவாக வந்து குறை தீர்த்தான்"

"மலர்மிசையோனும் மாலும் காணா; அலகிலா ஆடலுடைய அப்பன்
ஆட்கொண்டான்"

"நாமமோ செல்லப்பன் நல்லூரானே"

*தன்னம்பிக்கையை இழந்தவன் எல்லாமே இழந்து விடுவான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லப்பாச் சுவாமிகள் நல்லூர் முருகப் பெருமானேயன்றி வேறல்லர் என்பது சிவயோகசுவாமிகளின் முடிந்த முடிபு. “பேசா அநுபூதியை” என்றும் நிலைத்த பேரின்பத்தை; பாசநீக்கத்தை; பிறவா நிலையை நல்லூரான் குருமணியாக எழுந்தருளி தேரடியில் வில்வ மர நீழலில் வீற்றிருந்து தமக்கு உபதேசம் செய்து, அருட்பார்வையால் தம்மை ஆட்கொண்டு வழங்கியமை பற்றிய திவ்விய கருத்து சுவாமிகளின் நற்சிந்தனைப் பாடல்களின் ஊடு பொருளாகக் கலந்திருக்கும் பாங்கினை அவனருளாலே காணலாம்.

இறைவனே பக்குவமடைந்த ஆன்மாக்களை ஈடேற்றுவற்கு குருவாக எழுந்தருளுபவர் என்பதால் குருவின் திருப்பாதங்களைத் தொழுதல் கண்ணீர் ததும்பி வெதும்புதல் உள்ளம் உருகுதல் சேவித்தல், குரு இட்ட அருட்பணிகளை முட்டின்றி ஆற்றுதல், அவரின் அருள் வாக்குகளை உன்னிப்பாகச் செவிமடுத்துப் பேணுதல் யாவும் இன்பம் தருவன என்று அவரின் பின்வரும் நற்சிந்தனைப் பாடலில் குறிப்பிட்டுள்ளமை கருத்தில் கொள்ளற்பாலது.

குருபரன் அடியினை ஏத்துதல் இன்பம்
குருபரன் அருட்பணி ஆற்றுதல் இன்பம்
குருபரன் அருள்வாக் காக்கிடும் இன்பம்
குருபரன் சரண்புகக் கூடிடும் இன்பம்.

தம்மை ஆட்கொண்ட நல்லூரான் திருவருட்திறத்தைப் பாடிப் பரவுவதிலும்; தாம் பெற்ற இன்பம் இவ் வையகத்திலுள்ளோர் பெறவேண்டும் என்ற பெரு விருப்பத்தினாலும் தமது ஞானகுரு திருவாய் மலர்ந்தருளிய வேதாந்த சித்தாந்த சிவானுபவ உண்மைகளை உள்ளடக்கமாகக் கொண்ட மகா வாக்கியங்களை இலகுவாக மெய்யன்பர்கள் புரிந்து கொள்ளும் வகையில் கவிதை உணர்வுகள் புலப்பட விளக்குவதிலும் சிவயோக சுவாமிகள் ஈடு இணையற்றவராக விளங்குகிறார்.

திருமூலர் திருமந்திரம்; சிவகுரு தரிசனம் பற்றிக் கூறுவதை நோக்கில்; சிவயோக சுவாமிகளின் குருதரிசன விளக்கத்தின் சிறப்பை விளங்கி மகிழ்வுறலாம்.

குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென் பதுகுறித் தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய்க் நிற்கும்
குருவே யுரையுணர் வற்றதோர் கோவே.

-திருமந்திரம் 1581.

சிவமே குருவாகப் பரமாசாரியர் வடிவில் பக்குவப்பட்ட ஆன்மாக்களின் பாசத் தளைகளையறுத்துப் பிறவிக்குக் காரணமான மும் மலங்களையும் நீக்கி; ஞான ஒளி பாய்ச்சி, முத்திப்பேற்றினை வழங்குகிறார். குரு என்பதன் அர்த்தம் இருளை அகற்றி ஒளியை தருபவர் என்பதாகும். அறியாமை அஞ்ஞானம் எனும் இருளை நீக்கி, அறிவு ஞானம் என்னும் ஒளியை ஏற்றிவைப்பவர் குரு.

திருவடி ஞானஞ் சிவமாக்கி விக்குந்
திருவடி ஞானஞ் சிவலோகஞ் சேர்க்குந்

*சேமிப்பு இல்லாத குடும்பம் கூரை இல்லாத வீட்டிற்குச் சமம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவடி ஞானஞ் சிறைமல மீட்குந்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே.

-திருமந்திரம் 1598.

திருமூலரின் இத் திருமந்திரப் பாடலும்; சிவயோக சுவாமிகளின் மேற்படி நற்சிந்தனைப் பாடலும் கருத்தில் ஒத்திருத்தல் நமது சிந்தனைக்கு விருந்தாக உள்ளது. திருமூலர் மூல சித்தர் ஆவார். அவர் வழிவந்த சிவயோக சுவாமிகளும் சித்தரே என்பது நோக்கற்பாலது. சித்தர்கள் மோனநிலையில் முழுமைத்துவத்தை இறைநிலையை உணர்ந்தவர்கள்.

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருஉரு சிந்தித்தல் தானே.

-திருமந்திரம் 139.

சிவப்பரம்பொருளாம் குருவின் திருமேனியைக் காணுதல்; குருவின் திருநாமம் செபித்தல்; குருவின் திருவாய் மொழிகளைக் கேட்டல்; குருவின் காட்சியை எந்நேரமும் சிந்தித்தல் என்பன தெளிவு நிலைகள் ஆகும்.

இறைவனே சிவம் ஆக, முருகன் ஆக, குருவாக வெளிப்படுகின்றான். இதுவே சைவ நூல்கள் தரும் கருத்து.

சிவமும் முருகனும் வேறல்லர். இது கந்தபுராணம் தரும் அற்புதத் தகவல். சூர பத்மன் வாயிலாகவே அவனுக்கு ஞான ஒளி இறுதிக்கட்டத்தில் உதயமானபோது இவ் உண்மை வெளிப்படுத்தப்படுகிறது. குருபரன் சுவாமிநாதன் என்ற பெயர்ப் பதங்கள் முரு கனைக் குறிப்பன. தந்தைக்கு உபதேசம் செய்த மகன் என்ற முறையில் முருகன் இப் பெயர் பெற்றுள்ளமை நோக்கற்பாலது.

"என்னை என்னால் எனக் கறிவித்தவன் எங்கள் குருநாதன்
தென்னை மா பனை சேரு நல்லூருளான்"

"செல்லப்ப னென்னுஞ் சிவகுருவை நான் கண்டேன்
நல்லதப்பா வென்றான் நயந்து" சிவகுரு முருகனைக் குறிக்கின்றது.

"ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமிலான், நல்லூரில் குருவாக வந்து குறை தீர்த்தான்"

இறைவன் நாமரூபங்கள் அற்றவன். எனினும் அடியார்களுக்கு அருள்புரியத் திருவுளங் கொண்டு; பல படிகள் கீழிறங்கி, நாம ரூபங்கள் தாங்கி வருவான் எனச் சைவ சித்தாந்த நூல்கள் கூறும்.

"நாமமோ செல்லப்பன், நல்லூரானே" எனத் திடமாகக் கூறுகிறார்.

சிவனும் முருகனும் வேறல்லர்; ஒருவரே என்பதைக் கந்தபுராணம்; சூரபன்மன் வாயிலாகத் தெளிவுபடுத்தியுள்ளமை நோக்கற்பாலது.

"கோலமா மஞ்ஞை தன்னிற் குலவிய குமரன் தன்னைப்
பாலன் என்று இருந்தேன் அந்நாள்; பரிசு இவை உணர்ந்திலேன் யான்
மால் அயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகாரணமாய் நின்ற மூர்த்தி இம் மூர்த்தியன்றோ"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி வரும் பாடலில் சிவனே முருகன் என்பது மேலும் உறுதிசெய்யப்படுகின்றது.

"ஒற்று என முன்னம் வந்தோன் ஒரு தனி வேலோன் தன்னைப்
பற்று இகல் இன்றி நின்ற பராபர முதல்வன் என்றே
சொற்றனன்; சொற்ற எல்லாம் துணிபு எனக் கொண்டிலேன் ஆல்
இற்றை இப்பொழுதில் ஈசன் இவன் எனும் தன்மை கண்டேன்"

போர்க்களத்தில் முருகப்பெருமான் தாம் யார் எனச் சூரபத்மனுக்குத் திருப்பெரு வடிவம் எடுத்ததன் மூலம், உணர்ந்துகொள்ள அருள்பாலித்தான். அதனால் சூரபத்மன் சிறிது நல்லுணர்ச்சி பெறுகின்றான். அந்த நல்லுணர்வின் வெளிப்பில் முதலிலே பாலனாகத் தோன்றிய முருகனே; பிரம்ம விட்டுணுக்கள் முதலியோருக்கும் மற்றும் தேவர்கள், அசுரர்கள், மனிதர்கள் அண்டசராசரங்கள் மற்றும் எவர்க்கும் தோற்றத்திற்குக் காரணமாய், மூலமாய் அமைந்த சர்வ வல்லமைகளுடனான பரமசிவன் என்னும் உண்மை பற்றிய புரிதல் உணர்வு சூரபத்மனுக்கு ஏற்படுகின்றது. அவனின் இயல்பான ஆணவம் நீங்கப் பெற்றது.

இவ்வாறாக ஒரு பக்தனுக்குரிய பரவசநிலையை எய்தப் பெற்ற சூரபன்மன் தமக்கு ஆயிரத்துஎட்டு அண்டங்களையும் நூற்றுஎட்டு யுககாலம் ஆட்சிபுரிவதற்கு வரமளித்து; வச்சிரயாக்கையையும் வழங்கிய பரமசிவனை - முருகனை சுற்றிவந்து தாழ்ந்து வணங்கிப் போற்ற விரும்பினான். நன்றிமறவாமையை உணர்த்த ஆர்வமுற்றான். இம் மெய்ஞான உணர்வு உந்தல் ஒரு சிறிது நேரம் நீடித்தது. அந்த அளவில் சூரபத்மனுக்கு ஆணவம் மீண்டும் தலைதூக்கியது. தன்மான உணர்வு எழுச்சிபெற்று அவனின் பக்தியுணர்வைச் செயற்படுத்தவிடாமல் தடுத்தது.

இங்கு கச்சியப்பர் தாம் இயற்றிய கந்தபுராணம் வாயிலாக முருகப்பெருமானை முழுமுதற் பொருளாக உலகுக்கு உணர்த்தியுள்ளமை தெளிவாகின்றது. முழுமுதற் பொருளாகிய சிவபெருமானே முருகப்பெருமான் என்பதை சூரபத்மனுக்கு எடுத்துக் காட்டிய தோடு உலகத்தவர்க்கும்; சிவனும் முருகனும் ஒருவரே; இருவர் அல்லர் என்ற மறை பொருளாக விளங்கும் பேருண்மையை ஐயம் திரிபற எடுத்துக்காட்டியுள்ளார். அத்துடன் "தீயவை புரிந்தார் எனும் குமரவேள் திருமுன் உற்றால், தூயவர் ஆகி மேலைத் தொல் கதி அடைவர். ஒருவர் எத்தனை தவறுகள் செய்திருப்பினும் முருகப்பெருமான் சந்நிதி முன் வந்துவிட்டால் தூயவராகி விடுகிறார். இறைவனின் பேரருளும் கிட்டுகின்றது. மேல் நிலையான முத்தியும் கிடைக்கப்பெறுகின்றது என்னும் சைவசமய உண்மை கச்சியப்பர் கந்தபுராணம் ஊடாக வெளிப்படுத்தி விளக்கம் தந்துள்ளமை போற்றுதற்குரியது.

கந்தபுராணத்தில் கச்சியப்பர் "பங்கயன் முதலோர் காணாப் பரமன்"; "விண்ணோர் நாயகன்"; "வேதமும் அயனும் ஏனை விண்ணவர் பலரும் காணா நாதன்" ஆகிய இத் தொடர்கள் முழுமுதற் கடவுள் சிவபெருமானைக் குறிக்கக் கையாண்டுள்ளார்.

"யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கு
மாதொரு பாகனார் தான் வருவர்"

-சிவஞான சித்தியார் தரும் விளக்கம்.

சிவயோக சுவாமிகளின் பெருமை குருவை நல்லூர் முருகனாகக் கொண்டமை; அதேவேளை முருகனே குருவாக எழுந்தருளி வந்து ஆட்கொண்டமை ஆகும். ***(முற்றும்)***

***கட்டுப்பாடற்றவன் கௌரவம் இழப்பான்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்ச் செல்வம்

**– *திருமதி பொ. திலகவதி* அவர்கள் –**

உலகிலே கிடைக்கக்கூடிய செல்வங்களில் சிறந்த செல்வமாய் இருப்பவர் தாய். அன்பே ஆனவர், புனிதமானவர், தெய்வமாய் மதிக்கப்பட வேண்டியவரும் ஆவர். தரணியில் உதித்த படைப்புக்களில் மேன்மையானவர், பொறுமையின் சிகரம், கருணைக்கடல், பிள்ளைகளின் வாழ்வின் கலங்கரை விளக்கு ஆனவள். நேரில் காணும் தாய்மை என்னும் தெய்வம் அவள். பூமிக்கு உயிர் கொடுத்தவள். உயிருக்கு முகவரி தந்தவள் தாய். பெற்ற தாயை தவிர மேம்பட்ட தெய்வம் வேறென்ன உள்ளது. தாயின் அன்பு, பாசம், கருணை எல்லாவற்றுக்கும் ஈடு இணை இவ்வுலகில் கிடையாது. தாயிடம் அன்பு பாராட்டாதவர் இறைவனிடம் அன்பு வைப்பது பாலைவனத்தில் பொழிகின்ற மழைநீரைப் போன்றதே.

பிள்ளைகள் தாயை மதித்து போற்றி வழிபட வேண்டும். அவர்தான் பிள்ளைகளின் உண்மையான சொத்து. தாயின் ஆசி பிள்ளைக்கு ஆரோக்கியத்தையும் செல்வத்தையும் அளிக்கும். தாயை மதித்தால் இறைவன் தானாகவே பிள்ளைகளிடம் வருவார். இதை புண்டரிகன் கதை எங்களுக்கு காட்டுகிறது. தாயின் அன்பு என்பது விபரிக்க முடியாத ஒரு அரும்பெரும் பொக்கிஷமாகும். அந்த அன்பின் பிடியில் வாழ்பவனுக்கு எல்லாமே வெற்றிதான். தாய்மைக்கு முதல்நிலை கொடுப்பவன் வாழ்விலும் முதன்மை நிலையை அடைவான்.

ஐயிரு திங்கள் எம்மைச் சுமந்து தன் உதிரத்தை பாலாக ஊட்டி வளர்த்தவள். ஆலமரத் தொட்டிலிலே ஆராரோ பாட்டுப் பாடி பிள்ளைகளை தாலாட்டி சீராட்டி பார்த்தவள் தாய். பாசத்தின் பெருங்கடல் அவள். பிள்ளைகளுக்கு படிப்பினை போதித்தவள். பிள்ளைகளை பண்பாளனாய் ஆக்கியவள், பிள்ளைகள் கல்வியில் சிறந்து விளங்கினால் "ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனை சான்றோன் எனக் கேட்ட தாய்" மிகவும் மகிழ்ச்சி அடைவாள்.

"அம்மா என்பது தமிழ் வார்த்தை. அதுவே உலகில் முதல் வார்த்தை. அம்மா என்று குரல் எழுப்பிக்கொண்டேதான் குழந்தை பிறக்கின்றது. ஏன் விலங்கினங்கள்கூட அம்மா என்றுதான் குரல் எழுப்புகின்றன. பிறக்கும்போதும், ஆபத்து வேளையிலும், தடுக்கி விழுந்தாலும் கூட நம் வாயிலிருந்து வெளிப்படும் ஓசை அம்மாதானே. தன் குழந்தையை தெய்வமகன் என்று சொல்லி தேன் அமுதம் ஊட்டி அன்பாலே அணைத்திடுவாள். அம்மா என்று அழைத்திடவே ஆசையோடு ஓடிவந்து கன்னத்தில் முத்தமிடுவாள்.

ஒரு குழந்தையை வளர்ப்பதில் தந்தையைவிட ஒரு தாய்க்குத்தான் பெரும் பொறுப்புக்களும் கடமைகளும் உண்டு என்பதை யாராலும் மறுக்க முடியாது. எனவே உலகிலே ஒப்புயர்வுற்ற போற்றத்தக்க அன்பு தாய்தான் என்று பிள்ளைகள் நேசிக்க வேண்டும். பெண்ணிற்கு பெருமை தருவது தாய்மை ஆகும். தாயின் அன்பை வெளியிட உலகத்தில்

*அறிவு தலைக்குக் கிரீடம். காலுக்குச் செருப்பு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள எந்த மொழியிலும் வார்த்தைகள் இல்லை. தாயின் இதயம்தான் பிள்ளைகளின் பள்ளி. ஒரு தாய் நூறு ஆசிரியர்களுக்கு சமன். தாயின் நெஞ்சுக்குள்ளே இருப்பது இதயமல்ல அன்புத் தேனின் இரக்க ஊற்று சுரங்கம் ஆகும்.

வியாதியினாலும் துன்பத்தினாலும் அழுதபோது தன் பிள்ளைகளுக்கு இனிமையான கதைகள் சொல்லி ஆறுதல் கூறி இறைவனிடம் வேண்டி வியாதியை மாற்றுவாள். பிள்ளைகள் பாவம் செய்யாமல் விலகும் பொருட்டும் புண்ணியத்தைச் செய்யும் பொருட்டும் கடவுளிடத்தே அன்பு வைத்து அவரை வழிபடும் பொருட்டு போதித்தவர் தாய். தடி ஊன்றி நடக்கும் தாய்க்கு ஆறுதல் அளிக்க வேண்டும். தாயே நீ என்னைத் தாங்கி வளர்த்தாய். இனி உயிர் உள்ளவரை உன்னை தாங்குவேன் என்று பிள்ளை கூறினால் தாய் எத்தனை சந்தோசமும் மனநிறைவும் அடைவாள்.

பட்டினத்தடிகள் அனைத்தும் துறந்தபோதும் தாய் செல்வத்தை துறக்க அவரால் முடியவில்லை.

ஐயிரண்டு திங்களா யங்கமெலாம் நொந்து பெற்று
பையலென்ற போதே பரிந்தெடுத்து - செய்யவிரு
கைப்புறத்திலேந்திக் கனகமுலை தந்தாளை
எப் பிறப்பிற் காண்பேன் இனி?.

என்ற அவரது சொற்கள் முற்றும் துறந்தும் தாயை துறவாத முனிவனின் மன நெகிழ்ச்சியை நமக்கு அளிக்கின்றன. மனிதன் கண்முன்னே அறியப்படுகின்ற கடவுள் தாயே ஆகும். "தாயிற் சிறந்த ஒரு கோயிலும் இல்லை" என்பன தாயின் மகிமையைக் கூறுகின்றது. பதினாறு செல்வங்களுள் தாயும் ஒரு செல்வமாகும். பிற செல்வங்கள் இழந் தாலும் முயன்றால் அவற்றைத் திரும்பப் பெற்றுவிடலாம். தாய் செல்வத்தை இழந்தால் அதை எவராலும் திரும்பப்பெற முடியாது. செல்வங்கள் அனைத்திலும் தலையாய செல்வம் ஆதலின் அதனை தாய் செல்வம் எனவும் கருதலாம்.

தாயை தாயென்று உணர்ந்து அன்பு செய்து தாய்மைக்கு பெருமை தேடிக்கொடுத்து தாயைப் போற்றிக் காப்போமானால் பிள்ளைகள் வாழ்வில் தோல்வியே கிடையாது. எப்போதும் வெற்றியே கிடைத்தவண்ணம் வாழ்வார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

---

*ஒவ்வொரு மனிதனுடைய இதயமும் சில குறிப்பிட்ட அளவுக்குள் அடித்துக் கொண்டிருக்கிறது. இதனை எந்த விஞ்ஞானி விளக்க முடியும்? இதெல்லாம் இறைவனால் ஏற்படுத்தப்பட்ட சட்டங்கள். மருத்துவர்கள் தங்கள் சாதனைகளுக்காக மிகவும் பெருமைப்படுகிறார்கள். ஆனாலும் யாராலும் தெய்வ சங்கல்பமின்றி எதையும் சாதித்துவிட முடியாது. அவர்களுக்குத் தெரியும் எப்படி இதயம் துடிக்கிறது என்று. அது ஏன் துடிக்கிறது. அதை இயக்குபவர் யார் என்று அவர்களுக்குத் தெரியாது. இது எல்லாம் மனித முயற்சியால் நடப்பவை அல்ல, தெய்வ சங்கல்பத்தினால்தான் தேகம் இயங்குகிறது.*

*உன் வாழ்க்கையை நீ உண்மையாக நேசி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| கா. விஜயசுரேஸ் | சுவிஸ் | 100000. 00 |
| சிவா நறுமணப்பூங்கா | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| சி. பகீரதன் | கனடா | 5000. 00 |
| இ. சிவராஜா (இலங்கை வங்கி) | கரவெட்டி (கல்விப்பணி - மாதாந்தம்) | 15000. 00 |
| செ. கவிதா | லண்டன் (வல்வெட்டி) | 15000. 00 |
| T. லக்ஷ்மன் | பருத்தித்துறை | 10000. 00 |
| டனாஸ் | லண்டன் | 15000. 00 |
| சுசீலா நகை மாடம் | பருத்தித்துறை | தேங்காய், 1மூடை அரிசி |
| சி. தங்கவடிவேல் (சிற்றி வெதுப்பகம்) | தும்பளை | 1மூடை மா |
| S. ராஜ்குமார் | ஆனைப்பந்தி | 500. 00 |
| கி. புவனேந்திரன் | உடுப்பிட்டி | 5000. 00 |
| குருபரன் சிவதர்சினி | இத்தாலி | 2000. 00 |
| குமணன் ஆரீஸ் | நோர்வே | 10000. 00 |
| குமணன் தாருஸ் | நோர்வே | 10000. 00 |
| குகன் பிரியந்தி | இத்தாலி | 10000. 00 |
| குகன் பிரியசகி | இத்தாலி | 10000. 00 |
| த. ஸ்ரீதரன் | உரும்பராய் | 1000. 00 |
| தி. புவினா | கொக்குவில் | 2000. 00 |
| பத்மசேகர் நினைவாக | நல்லூர் | 5000. 00 |
| தேவி அரைக்கும் ஆலை | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| உ. கர்ணியா | கனடா | 10000. 00 |
| ம. அனுசாந்தி | அளவெட்டி | 1000. 00 |
| நா. கனகராசா | யாழ்ப்பாணம் | 25k அரிசி |
| கு. ரவி குடும்பம் | மயிலிட்டி | 5000. 00 |
| திரு மகிந்தன் குடும்பம் | அவுஸ்திரேலியா | 8000. 00 |
| அ. அருள்நாதன் | இணுவில் | 5000. 00 |
| அ. கிருஷ்னிகா | காரைநகர் | 1000. 00 |
| N. இந்திரன் | பண்டத்தரிப்பு | 5000. 00 |
| செல்வி ஞானசரஸ்வதி சின்னத்தம்பி | காங்கேசந்துறை | 5000. 00 |
| ம. ஸ்ரீகாந்தன் | அச்சுவேலி | 10000. 00 |
| சிவதாஸ் கஸ்தூரி | காரைநகர் | 5000. 00 |
| கந்தையா சிவதாஸ் | காரைநகர் | 5000. 00 |
| நவரட்ணம் லீலாவதி | காரைநகர் | 5000. 00 |

*உறுதியான உள்ளம் உலகை வெல்லும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| திரு விஜயரத்தினம் குடும்பம் | ஏழாலை | 1000. 00 |
| யோ. மதுசூதனன் | பருத்தித்துறை | 500. 00 |
| திரு விஜயநாதன் | திருகோணமலை | 500. 00 |
| ச. நிஷாந்தன் | ஏழாலை | 1புட்டி அரிசி |
| பூ. அகிலன் | கனடா | 10000. 00 |
| ம. வசந்தகுமார், வ. மாலினி, வ. அச்சாயினி } பிரான்ஸ் | முதியோர்களுக்கான உடுபுடவை | 5000. 00 |
| கா. ஆதரா | கரவெட்டி | 10000. 00 |
| தர்ஷன் அருளப்பு | கம்பளை | 1000. 00 |
| சி. பாலசுப்பிரமணியம் | கம்பளை | 1000. 00 |
| Dr சி. கிருஸ்ணபிரதீப் | கண்டி | 1000. 00 |
| அப்பாக்குட்டி செல்வி | பருத்தித்துறை | 1000. 00 |
| ச. பிறேமாவதி | சித்தங்கேணி | 10000. 00 |
| சி. தனலட்சுமி | புத்தூர் | 3000. 00 |
| க. ஜெயகாந்தன் | மண்டான் | 1000. 00 |
| ஜெ. ஓவியன் | மண்டான் | 1000. 00 |
| S. சற்குணநாதன் | லண்டன் | 30000. 00 |
| வே. கந்தசாமி | இடைக்காடு | 500. 00 |
| த. கோகுலன் | கொற்றவத்தை | 2000. 00 |
| ச. செல்வமலர் | கரணவாய் | 10000. 00 |
| துளசி குடும்பம் | இணுவில் | 1000. 00 |
| பு. சிவாஜினி | லண்டன் | 5000. 00 |
| திரு மகாலிங்கம் குடும்பம் | ஏழாலை | 1500. 00 |
| P. தயாபரன் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| தேவன் ஸ்ரோர்ஸ் | ஆவரங்கால் | 1புட்டி பருப்பு, 1மூடை அரிசி |
| மோகன் கடை | ஆவரங்கால் | 25k மா, 25k சம்பா, 1மூடை அரிசி |
| மா. கணேசலிங்கம் நினைவாக | சுன்னாகம் | 5000. 00 |
| க. சத்தியதாஸ் | சிறுப்பிட்டி | 5000. 00 |
| ஸ்ரீ. சுகந்தினி | சிறுப்பிட்டி | 5000. 00 |
| மு. வினோத் | மானிப்பாய் | 1000. 00 |
| தி. செந்தில்நாதன் | உடுப்பிட்டி | 5000. 00 |
| க. ஞானச்சந்திரன் | கொக்குவில் | 2000. 00 |
| T. அபிகேஷினி | மந்திகை | 1புட்டி அரிசி |
| பி. சபேஷ்காந் | வல்வெட்டி | 500. 00 |
| பூ. சுலோசனா | அச்சுவேலி | 5000. 00 |
| ல. ஆர்னீஸ் | கரவெட்டி | 10000. 00 |
| திரு ராமலிங்கம் குடும்பம் | அச்சுவேலி | 15000. 00 |

*உழைப்பின் வேரோ கசப்பு. கனியோ இனிப்பு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தினேஸ் கோகிலாஜி (தினேஸ் பேக்கரி) | மானிப்பாய் | 10000. 00 |
| சிவலிங்கம் சசிகலா துஷிதன் நினைவாக | கொக்குவில் | 5000. 00 |
| திருமதி சேனாதிராசா | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| திரு ஸ்ரீதரன் குடும்பம் | உரும்பராய் | 2000. 00 |
| சி. அபிஷாந் | கனடா | 1000. 00 |
| ச. கபிஷாந் | கனடா | 1000. 00 |
| சா. துவியன் | ஊரெழு | 1000. 00 |
| க. மனோகரன் | சுவிஸ் | 5000. 00 |
| ந. சிந்துஜா | சுவிஸ் | 3000. 00 |
| தி. அபிராமி | நெல்லியடி | 1000. 00 |
| K. கஜந்தன் | தெகிவளை | 500. 00 |
| ந. தெய்வேந்திரராஜா | வல்வெட்டி | 4000. 00 |
| பு. நிரோஜா | அளவெட்டி | 1புட்டி அரிசி |
| இ. ஜெயச்சந்திரன் | அளவெட்டி | 1000. 00 |
| திரு திருச்செல்வம் குடும்பம் | வவுனியா | 500. 00 |
| உ. யசோதா | சுன்னாகம் | 2000. 00 |
| பா. முரளிதரன் | சுன்னாகம் | 2000. 00 |
| முருகன் அடியார் | கொழும்பு | 2000. 00 |
| சி. அன்புமலர் | வட்டுக்கோட்டை | 5000. 00 |
| சி. சபேசன் | லண்டன் | 5000. 00 |
| சி. அசிதன் | வட்டுக்கோட்டை | 12000. 00 |
| அ. காசின் | வல்வெட்டித்துறை | 10000. 00 |
| கு. மாலா | அளவெட்டி | 5000. 00 |
| K.S. கணபதிப்பிள்ளை | கைதடி | 2000. 00 |
| S. அனுஷித் | நெல்லியடி | 1000. 00 |
| Dr மோகனராஜா | கொழும்பு | 1000. 00 |
| சு. கந்தகுமார் குடும்பம் | பிரான்ஸ் | 5000. 00 |
| திரு குவேந்திரராஜா குடும்பம் | பிரான்ஸ் | 5000. 00 |
| தி. சத்தியா | மந்திகை | 2000. 00 |
| த. துவாரகன் | கொழும்பு | 5000. 00 |
| R. சிவபாலசிங்கம் | ஆனைமடுவ | 5000. 00 |
| பொ. இளையதம்பி | சிறுப்பிட்டி | 2000. 00 |
| நி. கவிதாஸ் | நீர்வேலி | 1000. 00 |
| சுதன் சங்கீதா | கனடா | 2000. 00 |
| வீரசக்தி கற்பகம் | பளை | 3000. 00 |
| கு. யோகாம்பிகை | மருதங்கேணி | 1000. 00 |
| திரு குமார் குடும்பம் | கோண்டாவில் | 2000. 00 |
| திரு பிரணாவ் | அரியாலை | 2000. 00 |

***இனிய முகம் உறவை வளர்க்கும்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| திரு சிவசுப்பிரமணியம் மூலம் சி. சஞ்சீவன், சி சாருண்யன், சி. பிருந்தா | நாகர்கோவில் | 18000. 00 |
| திரு பகீரதன் குடும்பம் | சுன்னாகம் | 6000. 00 |
| திரு நீரோஜன் குடும்பம் | பிரான்ஸ் | மரக்கறி, கடலை, அரிசி |
| சின்னராசா பிரகாஸ் | கோப்பாய் | 20000. 00 |
| சுரேந்திரன் சிம்மகி | தெல்லிப்பழை | 5000. 00 |
| சு. தருணிகன் | மல்லாகம் | 2000. 00 |
| த. ரிசோனா | கொழும்பு | 5000. 00 |
| ச. சமீரா | உரும்பராய் | 3500. 00 |
| க. ஈசன் | தம்பசிட்டி | 1000. 00 |
| ஆ. அர்வின் | சமரபாகு | மரக்கறி, அரிசி |
| M. செந்தூரன் | யாழ்ப்பாணம் | 500. 00 |
| மகேந்திரன் கஜேந்திரன் | உடுப்பிட்டி | 5000. 00 |
| இ. சண்முகவடிவேல் | நயினாதீவு | 25000. 00 |
| K. குமாரசாமி | கரவெட்டி | 3000. 00 |
| நா. மகாலிங்கம் | மானிப்பாய் | 500. 00 |
| J. சந்திரப்பிரகாசம் ஆசிரியர் | பருத்தித்துறை | 5000. 00 |
| ஸ்ரீ. மிதுரா | கனடா | 6000. 00 |
| தி. பாஸ்கரன் | வல்வெட்டி | 5000. 00 |
| திருமதி அகிலன் விஜயவதனி | வல்வெட்டி | 5000. 00 |
| திருமதி மாலதி | கொழும்பு | 2புட்டிஅரிசி 1000. 00 |
| க. நகுலேஸ்வரன் | மானிப்பாய் | 3புட்டி அரிசி 25000. 00 |
| திரு சாந்தன் குடும்பம் | மிருசுவில் | தேங்காய், 1புட்டிஅரிசி |
| இ. வரதன் | கரணவாய் | 6000. 00 |
| குவேந்திரன் தக்ஷா | சரசாலை | 10000. 00 |
| S. சுகுந்தன் | ஜேர்மன் | 10000. 00 |
| S. லக்கீஷன் | நல்லூர் | 1000. 00 |
| பிரவீன் அனன்ஜா | கோண்டாவில் | 100000. 00 |
| சி. அருச்சுனன் | சுன்னாகம் | 1000. 00 |
| ய. கிருத்திகா | கோப்பாய் | 1000. 00 |
| ர. ஹேவதி | அச்சுவேலி | 500. 00 |
| க. பாலமுரளிதரன் | அச்சுவேலி | 1புட்டி அரிசி 500. 00 |
| திரு சந்திரகுமார் குடும்பம் | கட்டைப்பிராய் | 1500. 00 |
| க. கஜன் | உடுப்பிட்டி | 1000. 00 |
| லி. கஜானி | ஜேர்மன் | 5000. 00 |

(தொடரும்...

*மலையைப் பார்த்து மலைத்துவிடாதே. மலைமீது ஏறினால் அது உன் காலடியில்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்போல் எல்லாம் ஈடேறுமா?

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

நாம் செய்த செய்கின்ற வினைப் பயன்கள் பற்றி இன்றைய சிந்தனைக்கு நாம் எண்ணியவற்றை எண்ணப்படி எல்லாம் செய்துவிட முடியுமா? அதுதான் முடியாதே! அப்படியானால் அவனின்றி அணுவும் அசையாது எல்லாமே இறைவன் ஆணையின் வண்ணமே நடக்கும், எனக்கொள்வோம்.

ஆனால் எல்லாம் தங்களாலேயே நடந்து முடிகிறது என்று எண்ணி இறுமாந்திருப்பவரும் சிலர் எம்மத்தியில் இருக்கத்தான் செய்கிறார்கள். உண்மையின்படி மனிதன் எண்ணியது எல்லாமே நடந்தேறியதாக சரித்திரம் இல்லை.

வெற்றிகள் எமது வாழ்வில் தொடர்ந்து வரலாம். ஆனால் நினைத்ததெல்லாம் நடந்தேறியது என்பது அசாத்தியம். இது வரலாற்றில் இல்லை.

கேனோ உபநிடதத்தில் ஓரிடம் ஒரு சந்தர்ப்பத்தில் வாயு பகவான் ஒரு துரும்பையே அசைக்க முடியாமல் நின்றாராம். அக்கினி பகவானோ அதே துரும்பை எரிக்க முடியாமல் நின்றாராம். தேவ தேவனான இந்திரனோ அசைவு அற்று அல்லற்பட்டாராம். அப்படியென்றால்!

இறைவன் அருள் அவர்களுக்கு கிடைக்கவில்லை என்று அர்த்தம்.

ஏன்! எமது அனுபவங்களையே எடுத்துக்கொள்ளுங்களேன்.

இதனைச் செய்துமுடிக்க வேண்டும். இதனைப் பெற்றுவிட வேண்டும், சில சமயம் இதை இப்படிச் செய்வோம் அதை அப்படிச் செய்வோம் என்று திட்டமிடுவதைவிட, திருவருளை முன்னிட்டு எதையும் செய்ய முற்படுவோமாயின் அப்போது இறையருள் துணை நின்று அக் கருமங்களை எமக்கு முடித்துக் கொடுக்க வாய்ப்புண்டு.

எண்ணியவாறு எல்லாமே நடப்பதில்லை என்பதற்கு ஒரு கதையைக் கேட்டுப் பாருங்கள்.

ஒரு பெரிய காடு. மத யானை ஒன்றைக் குறிவைத்த வேடன் ஒருவன் ஒரு புற்றின் பின் மறைந்து யானையை நோக்கி அம்பைச் செலுத்தினான். குறி தவறவில்லை. மதயானை கணை பட்டு வீழ்ந்து மாய்ந்தது. இந்த ஆரவாரத்தில் புற்றில் இருந்த பாம்பு வெளியே வர அதனை வேடன் மிதிக்க அந் நாகம் சீறி எழுந்து வேடனைத் தீண்டியது. பாம்பையும் கொன்றான் வேடன். ஆனால் சிறிது நேரத்தில் விடம் தலைக்கேற மாண்டான்.

யானை, வேடன், பாம்பு மூன்றும் ஓரிடத்தில் இறந்து கிடந்தன. இரை தேடி வந்த நரி ஒன்று அந்த வழியே வந்தது. மூன்று பிணங்களையும் கண்டது. ஆகா! என்ன அதிஷ்டம் எனக்கு மாசக்கணக்கிற்கு போதும் இந்த உணவு எனத் துள்ளிக்குதித்தது.

இவை அத்தனையும் இருக்கட்டும். முதலில் வேடனது வில்லில் இருக்கும் நாணைக் கடித்துத் தின்போம். அதையும் ஏன் விடவேண்டும் என்று கூறி நாணைக் கடித்தது நரி.

*ஒன்றை உன்னால் கனவு காணமுடியுமாயின் அதனை உன்னால் செய்யவும் முடியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடித்ததும் வில் முனை வீச்சாகி நிமிர்ந்து நரியின் தலையில் அடிக்க நரியின் தலை நறுக்குண்டு வீழ்ந்தது. நரியும் மாண்டது. அதன் எண்ணங்களும் அதனோடு மாண்டன.

எத்தனை திட்டங்கள் எத்தனை எதிர்பார்ப்புக்கள் அத்தனையும் ஈடேறுமா? ஈசனுக்குத்தான் வெளிச்சம்.

எனவே, நல்லதை நினைப்போம். நல்லதைச் செய்வோம். பிறருக்கு உதவி செய்யாவிடினும் உபத்திரவம் செய்யாதிருப்போம். ஆண்டவன் இன்னருள் துணை நிற்கவேண்டி எமது கடமைகளைத் தொடர்வோம்.

**சிரித்து வாழு; சிரிக்க வாழாதே**

சிரித்து வாழு வாழ்விலூர்
சிரிக்க வாழ்வ தைவிடு
சிரித்து வாழ்வ தாலுடல்
சிறப்பதோடு முன்னிலும்
பருத்த தாக மாறநீ
பழக வேண்டுஞ் சிரித்திட
சிரித்து வாழு வாழ்வினுன்
சிரிப்பினாலே நீயுயர்

**உழைத்துவாழு; பிறர் உழைப்பில் வாழாதே**

உழைத்து வாழு வாழ்வினுன்
உழைப்பினாலே நீயுயர்
களைத்து வேலை செய்துவாழ்
கடவுள் தந்த கரத்தினால்
இழைத் திடாதே தீங்கினை
எவர்க்கும் மென்று மேழையை
அழைத்து ஊணு மளித்திடு
அன்பி லுலகை வென்றிடு

**அடக்கி ஆளாதே; அடங்கி வாழாதே**

துதிக்க வேண்டு மீசனை
துதிப்ப தோடு மனிதனை
மதிக்க வேண்டும் மனிதனாய்
மதிப்ப தோடு மனிதர்கள்
உதித்த போது எதனையும்
எடுத்து வந்த தில்லையாம்
அதைத் தெரிந்த பின்னுமா
அடக்கியாள எண்ணுவாய்.

- விநாயகமூர்த்தி, தீ.

*செய்ய முடிந்தவன் சாதிக்கிறான். செய்ய முடியாதவன் போதிக்கிறான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தர் பூமி

– திரு கு. சிவபாலராஜா அவர்கள் –

முன்னொரு காலத்தில் சந்நிதித் திருத்தலம் அமைந்துள்ள சூழல் பிரதேசங்களில் பெரும் எண்ணிக்கையில் சித்தர்கள் வாழ்ந்தனர் என்றும், அவர்கள் அப்பிரதேச மண்ணிலேயே சமாதியடைந்தனர் என்றும் அறிஞர்கள் தெரிவித்துள்ளனர். ஒரு முறை யோகர் சுவாமிகள் செல்வச்சந்நிதித் திருத்தலத்திலிருந்து பிரிந்து செல்லும் புறவீதிப் பிரதான தெருச் சந்தியில் தான் பிரயாணம் செய்த காரினை நிறுத்தச் சொல்லித் தனது கரங்களைத் தலைமேற் குவித்து வணங்கி, இங்கெல்லாம் சிவலிங்கங்கள் என் கண்களுக்குத் தெரிகின்றன எனக் கூறி வணங்கினாராம். அவருடன் வந்த ஏனையோரின் கண்களுக்கு அச் சிவலிங்கங்கள் தெரியவில்லை. சித்தர்கள், ஞானிகளின் கண்களுக்கு மட்டுமே அவை புலப்படும் என்பதும் உண்மையே. இச் சிவலிங்க அருவுருவங்கள் சித்தர்கள் சமாதியடைந்த இடங்களில் தானாகத் தோன்றியவை. சந்நிதித் திருத்தல சூழலில் ஏராளமான சித்தர்கள் வாழ்ந்து பின்னர் அவர்கள் சமாதியடைந்த வரலாற்று நிகழ்வுகளே மேற்கூறப்பட்ட உண்மைகளாகும். எனவே யோகர் சுவாமிகள் அங்கு புலப்பட்ட சிவலிங்கங்களை வழிபட்டுவிட்டு, சந்நிதித் திருத்தல வாயிலுக்குச் செல்லாமலே திரும்பிவிட்டதாகச் சொல்லப்பட்டது. தொண்டைமானாறு செல்வச்சந்நிதித் திருத்தலம் சித்தர்கள் வாழ்ந்து சமாதியடைந்த பேறு பெற்ற விசேட தலமாக விளங்கியுள்ளமையும் இன்றும் அதன் சிறப்பு மேலோங்கி நிற்பதையும் அறியக்கூடியதாகவுள்ளது.

யார் இந்தச் சித்தர்கள்? ஒன்றைப்பற்றி எழுதுவதும் பேசுவதும் இலகுவான செயல்களாயினும், ஒன்றனுக்கு இலக்கணம் கூறி வரையறை செய்வது சிக்கல் நிறைந்த செயலாகும். அதனால் சித்தர்களுக்கு இலக்கணம் அமைப்பது மேலும் சிக்கலான செயலே. "வெட்ட வெளிதனை மெய்யென்று இருப்போர்க்குப் பட்டயம் ஏதுக்கடி" என்னும் போக்குடையோர் தம்மைப்பற்றிப் புகழ்ந்து சித்தர் என்னும் கொள்கையுடன் திரியமாட்டார்கள். ஒரு சித்தரை அடையாளம் காண்பதற்கு அவரின் புறத்தோற்றம், அகவுணர்வு, பேசும் மொழி, ஆற்றும் செயல்கள் எனப் பலவற்றையும் ஆராய்ந்தே சித்தர்களை அடையாளம் காண வேண்டிய நிலையுள்ளமை அறியலாம். இறைமை அடைந்தவன் சித்தன். அவர்களின் செயல் "சித்தி" என்பதாகும். ஆன்மாவின் பண்பட்ட நிலை "சித்தி" என வழங்கியிருக்கலாம் எனவும் எண்ணவேண்டியுள்ளது. சமாதி என்பது உயிரும் இறைவனும் ஒன்றி நிற்றல். அட்டாங்க யோகம் செய்து முற்றுப் பெற்றவர் அடையும் பேறுகளில் அட்டமாசித்தி ஒன்றாகும். இது யோகப் பயனாலும் ஈசன் அருளாலும் கிட்டுவது.

சித்தர்கள் தமது நடை, உடை, பாவனைகளால் ஏனைய மக்களிடமிருந்து வேறுபட்டவர்கள். இது ஓர் பொதுவான கருத்தாகும். இந்திய நாட்டுச் சித்தர்கள் பலரும்

*தேவைப்படுவதைப் பெறுவதற்கு தொடர்ந்து செயற்பட்டுக்கொண்டே இரு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையில் சடைமுடியும், முகத்தில் நீண்ட தாடியும், அழுக்குப் படிந்த கழுவாத உடலும், கந்தல் உடையும் தாங்கியவர்களாகவே காட்டப்பட்டுள்ளனர். அவ்விதமே அவர்களும் காணப்படுகின்றனர். சித்தர்களைப் பற்றிப் பட்டினத்தடிகள் பின்வரும் பாடலைப் பாடியுள்ளார்.

உடைக்கோ வணம் உண்டு
உறங்கப் புறத்திண்ணையுண்டு, உணவிங்கு
அடைகாய் இலையுண்டு
அருந்தத் தண்ணீருண்டு அருந்துணைக்கே
விடையேறு ஈசர்
திருநாமம் உண்டு; இந்த மேதினியில்
வடகோடு உயர்ந்தென்ன
தென்கோடு சாய்ந்தென்ன, வான் பிறைக்கே.

சித்தர்களின் வாழ்க்கை ஏனைய மக்களின் உலகியல் வாழ்க்கையிலிருந்து வேறு பட்டிருக்கும். சித்தர்கள் தெளிந்த ஞானம் உடையவர்கள். அவர்கள் உலகியல் பற்றுக்களை விட்டவர்கள். நேரம் காலம் என்பன பாராமல் எங்கும் சுற்றித் திரிவர். எதையும் பொருட் படுத்தாமல் பிணம்போல் கிடப்பர். நாய்போல் உண்டுறங்கி, நரிபோல் ஊளையிட்டுத் திரிவர். பெண்களைக் கண்டால் தாய்போல் எண்ணி நடப்பர். எல்லா மக்களும் சமம் என்னும் கருத்தில் அவர்களைத் தம் உறவு என எண்ணி அன்பு காட்டுவர்.

புறத் தோற்றத்தில் சித்தர் மரபு இவ்வாறு சொல்லப்பட்டாலும், அதற்கு மாறாக வள்ளலார் இராமலிங்க சுவாமிகளின் புறத்தோற்றம் அமைந்தமை பற்றி நாம் அறியப்படலாம். அவர் தூய உடலும், உடலை மூடிய தூய வெண்ணிற ஆடையும் எல்லோரிடமும் இயல் புடன் பழகும் தன்மையும் உடையவராகவே அவர் வாழ்ந்தார் என்பது வரலாற்றுண்மையே எனவே சித்தர்களின் புறத்தோற்றத்தை மட்டுமே கருத்தில் கொண்டு அவர்களைக் கணக்கிட முடியாமலும் உள்ளது. மேலும் புறத்தோற்றம், காலம், இடம் ஆகிய சூழலுக்கேற்ப மாற்ற மடையவும் முடியும். சித்தர்கள் உலகெங்கும் வாழ்ந்துள்ளனர். எனவே சித்தர்களை அளவிட அவர்களின் புறத்தோற்றத்தை மட்டும் பொதுவான அடையாளமாகக் கொள்ளவும் முடியாது.

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்.

-குறள்.

சித்தர்கள் யார் என்பதை மேலுள்ள குறள் விளக்கி நிற்கிறது. தவத்திற்குப் பொருந்தாத இரண்டு ஒழுக்கங்களை விலக்குதல் வேண்டும். அவைகள் வேண்டுவதில்லை. உயர்ந்தோர் பழிக்கும் செயல்களைச் செய்யாமல் விடுவராயின் அதுவே போதுமானது. சித்தர்கள் இப்படிப்பட்ட ஒழுக்கமுடையவர்கள். கொள்கைப்பற்று மிக்கவர்கள் சித்தர்கள். அதைத் தவிர வெளி வேடதாரிகளாகச் சித்தர்கள் இருப்பதில்லை. வெளி வேடங்களைச் சித்தர்கள் விரும்புவதில்லை.

*பிறந்துவிட்டோம் என்று வாழாதே. இனி பிறக்கப் போவதில்லை என்று நினைத்து வாழ்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையாத பொருள்களின் மீதுள்ள பற்றினை விடுதலை துறவு என வள்ளுவர் கூறியுள்ளார். நிலையாத பொருட்பற்றானது இம்மையிலும் மறுமையிலும் துன்பம் தரும் இயல்புடையது. ஒருவன் எல்லாப் பொருட்களையும் துறவானாயினும் எந்தெந்த பொருளை விட்டுப் பற்று நீங்கினானோ அந்தந்த பொருட்களால் வரும் துன்பங்களை அவன் அடை வதில்லை. எனவே பற்று நீங்கியவர்கள் சித்தர்கள் என்று தெளிதல் வேண்டும்.

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்.

-குறள்.

சித்தர்களிடம் பல ஆற்றல்கள் உள்ளன. அவற்றுள்ளும் ஓராற்றல் மிகப் பிரதானமானது. அவ்வாற்றல் குறிப்பான ஒன்றாகும். சித்தர்களிடம் காணப்படும் பற்றற்ற நிலையாகிய ஆற்றல்தான் அது. அவ்வாற்றல் அவர்களின் ஆண்மையாகும். அவர்களை எமன்கூட எது வும் செய்யமுடியாது. சித்தர்கள் தன்னுயிரைப் பெரிதாக மதிப்பதில்லை. அவர்கள் தன்னுயிரைக்கூட பிறருக்குத் தியாகம் செய்து கொடுக்கும் திறனுள்ளவர்கள். அதனால் தன்னுயிரைப் பெரிது என மதிப்பதில்லை. தன்னுயிர் கொண்டுபோக வரும் கூற்றுவனைப் பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை. எமனையும் வெல்லும் திறன்மிக்கவர்கள் சித்தர்கள் என்பதை உணர்தல் வேண்டும்.

கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப் பட்டவர்க்கு.

-குறள்.

சித்தர்களின் அகநிலையை நோக்கும்போது அதன் உண்மைத் தன்மையை ஆராய்தல் வேண்டும். புறத்தோற்ற மாற்றங்களைக் கொண்டு ஒருவரின் அகநிலையை அனுமானிப்பது தவறாகி விடக்கூடும். கொள்ளையடிப்பவர்கள் வெளியில் நல்லவர்கள் போலத் தோற்றமளிப் பதை நாம் காண்கின்றோம். சித்தர்களின் புறத்தோற்றத்தை ஆராய்வதை விடுத்து அவர்களின் அகநிலையை ஆராய்வதே அறிவின்பால் உள்ள செயலாகும். சித்தர்களின் சித்தம் "சிவம்" என்னும் பூரண நிலையில் ஒன்றியிருக்கும். சித்தர்கள் தமது உடலால் இவ்வுலகத்தில் இருந்தாலும் அவர்தம் சிந்தனையால் சிவலோகத்தில் இருப்பார்கள். இந்த உண்மையை உணராதவர் சித்தர்களைப் பித்தர் என்றும், பித்தர்களைச் சித்தர் என்றும் பிழைபட உணர் வதாக "சிவவாக்கியர்" விளக்கியுள்ளார். உலகியலில் இருந்தாலும் அதில் பற்று அற்றவராகவே சித்தர்கள் இருப்பார்கள். அதில் "ஓடும் புளியம்பழமும் போல" ஒட்டாமல் இருப்பார்கள். சித்தர்களின் மனம் பற்றுக்களின் தாக்கத்தால் அதிர்வடைவதில்லை என்று கூறியுள்ளார் "பத்திரகிரியார்" அவர்கள். சித்தர்கள் பற்றுத் துறந்தவர்கள் எனினும் அவர்கள் காடுகளிலும், குகைகளிலும் வாழவேண்டும் என்பதில்லை. உலகியல் வாழ்வில் இருந்துகொண்டே அவ் வாழ்வில் ஒட்டுதல் அல்லது ஒட்டுறவு இல்லாமல் வாழ முடியும். அது மிக மேலான நிலைமை எனக் கூறப்பட்டுள்ளது. சித்தர்களின் மனம் அழுக்கற்று இருந்தால் அது போதுமான நிலையாகும். அதுவே சித்தர்களுக்கு மிகவும் வேண்டியது. அதைக் கொண்டே சித்தர்களை

*கனவு என்பது தூக்கத்தில் காண்பது அல்ல. உங்களைத் தூங்கவிடாமல் செய்வது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையாளம் காண முடியும். சித்தம் விகாரப்படினும் எத்தகைய அதிர்வுகளுக்கும் ஆளாகாமல் தெளிந்து இருப்பவர்கள் சித்தர்கள். அவர்கள் அண்டம் முழுவதையும் "சிவம்" எனவே எண்ணியிருப்பவர்கள். எப்போதும் அவர்கள் மனமானது ஆனந்தத்தில் திளைத்திருக்கும்.

சித்தர்களிடம் காணப்படும் "சித்து" ஓர் இயற்கை கடந்த செயலாகும். பொதுவாகவே இயற்கை கடந்த செயல் சித்து எனப்படும். ஆன்ம நெறிகளில் செல்வோர் யோகப் பயிற்சி செய்வோர்கள் அடையும் பேறுகளில் சித்து கைவரப் பெறுதலும் ஒன்றாகும். பதினெண் சித்தர்கள் எனப்படும் தமிழ்ச் சித்தர்கள் வாழ்விலும் மற்றும் நவநாதச் சித்தர்கள் எனச் சிறப்பிக்கப்படும் சித்தர்கள் வாழ்விலும், ஈழத்துச் சித்தர்கள் வாழ்விலும் "சித்தாடல்" நிகழ்ச்சிகள் நடைபெற்றதாகச் செவிவழிச் செய்திகள் தெரிவிக்கின்றன. "சித்தாடல்" என்பது சித்தர்களின் வாழ்வில் பொதுவாகக் காணப்படுவது. சித்தர்கள் அனைவரும் சித்தாடல் திறனுடையவர்கள். பல சித்தர்கள் தமது சித்தாடல் நிகழ்ச்சிகளை வெளிப்படுத்தியுள்ளனர். சிலர் வெளிப்படுத்தவில்லை. சில சித்தர்கள் நிகழ்த்திக் காட்டிய சித்தாடல் நிகழ்ச்சிகள் பற்றிய செய்திகள் கிடைக்கவில்லை. பட்டினத்தடிகளின் வரலாறு இதற்கோர் உதாரணமாகும். பட்டினத்தாரைக் கள்வர் என பிழைபட உணர்ந்த பத்திரகிரி மன்னன் அவரைக் கழுவில் ஏற்ற ஆணையிட்டான். பட்டினத்தார் கழுமரத்தை நோக்கி "என் செயலாவது யாதொன்று மில்லை, இனித் தெய்வமே" எனப் பாடியதும் கழுமரம் தீப்பற்றி எரிந்தது. இதனையறிந்த பத்திரகிரி மன்னர் துறவறம் பூண்டு பட்டினத்தாரின் சீடரானார்.

வட இந்தியச் சித்தர்கள் தமிழ்ச் சித்தர்கள் எனவும், பதினெண் சித்தர்கள் எனவும் அழைக்கப்பட்டனர். பதினெண் சித்தர்கள் தொகை அதிகரித்து இருபத்திரெண்டு சித்தர்கள் எனவும் அறியப்பட்டுள்ளது. அவர்களின் பெயர்கள் பின்வருமாறு அழைக்கப்பட்டுள்ளது.

அகத்தியர், அழுகண்ணர், போகர், சட்டைநாதர், ஞானேஸ்வரர், இடைக்காடர், காலாங்கிநாதர், கமலமுனி, கருவூரார், கொங்கணர், கோரக்கர், குதம்பைச்சித்தர், மச்சமுனி, பாம்பாட்டிச்சித்தர், புலஸ்தியர், புலிப்பாணி, புண்ணாக்கீசர், இராமதேவர், சிவவாக்கியர், தேரையர், திருமூலர், வல்லபசித்தர் ஆகியோர். புலஸ்தியர், தேரையர், யூகிமுனி ஆகிய மூவரும் முக்கியமான சித்தர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். இம் மூவரும் முதன்மைச் சித்தர்களாவர். சிவயோகமாமுனி என்பவர் அகத்தியரைக் குறிப்பதாகவும் கூறப்பட்டுள்ளது. பதஞ்சலி என்பது பாம்பாட்டிச் சித்தரைக் குறிக்கும் வார்த்தையாகும். வியாக்கிரமர் என்பது புலிப்பாணியரைக் குறிக்கும் மரபு எனப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் வாழ்ந்த சித்தர்கள் எனக் குறிக்கப்பட்ட சித்தர்கள் திருமூலர், சிவவாக்கியர், பட்டினத்தார், பாம்பாட்டிச் சித்தர், அகப்பேய்ச் சித்தர், குதம்பைச் சித்தர் ஆகியோராவர்.

ஈழ நாட்டிலும் ஈழத்துச் சித்தர்கள் என சித்தர்கள் வாழ்ந்து இங்கு ஒரு ஞான பரம்பரையைத் தோற்றுவித்துள்ளனர். அவர்களுள் கடையிற் சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகள் மற்றும் நவநாதச் சித்தர், பெரியானைக்குட்டி சுவாமிகள், சித்தானைக்குட்டி சுவாமிகள் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

*தளராத இதயம் உள்ளவனுக்கு இவ்வுலகில் முடியாதது என்று எதுவுமில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தர்களின் தொகை இவ்வளவுதான் என்றில்லை. பல லட்சம் சித்தர்கள் இந்தியா விலும் இலங்கை நாட்டிலும் வாழ்ந்து நடமாடி, தமது ஞான அனுபவங்களை வார்த்தை களாலும் செயல்களாலும் வெளிப்படுத்தியுள்ளார்கள். அவர்களில் ஏராளமான சித்தர்கள் சமாதி அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. வட .இந்திய இமயமலைச் சாரலில் இன்றும் சித்தர்களின் நடமாட்டம் உள்ளமை பற்றி பேசப்படுகிறது.

கடவுளைக் காண முயலகின்றவர்கள் பக்தர்கள் என்போம். கடவுளைக் கண்டு தெளிந்தவர்களைச் சித்தர்கள் என்போம். சில தேவாரங்களில் இவ் வேறுபாடுகள் சுட்டப் பட்டுள்ளது. "ஆத்தாளைப் பூசித்தோன் அவனே சித்தன்" என்று கருவூரர் கூறுகின்றார். "எழும்பாமல் வாசனையைக் கொன்றோன் ஞானி, ஏகாமல் வாசனையை யடித்தோன் சித்தன்" என சட்டைமுனி கூறியுள்ளார். "சிந்தை தெளிந்திருப்பவன் ஆர் அவனே சித்தன்" "செகமெல்லாம் சிவமென்றே அறிந்தோன் சித்தன், சிறந்து மனத்தெளிவாகிச் சேர்ந்தோன் சித்தன்" என வான்மீகி கூறினார்.

(தொடரும்...

---

# சந்நிதியான் ஆச்சிரம
# சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் நினைவலைகள்

**சித்த வைத்தியர் பொன்னம்பலம் இராமநாதன்**



சைவத்தின் முழுமுதற் பொருளே சிவன்
கைவந்த சித்த வைத்தியநாதன் சிவன்
சித்தர்கள் கண்ட கைவந்த மருத்துவம்
சித்த மருத்துவம்தான் எம் முன்னோர்கள் மருத்துவம்.

பக்க விளைவற்ற சித்த வைத்தியர் பரம்பரையில்
சித்த ஆசான் பொன்னம்பலம் இராமநாதன்
எத்தனை இடருற்ற காலத்திலும் எல்லையில்
சித்த வைத்தியம் செய்த பேராசான்.

உயிர் காக்கும் உத்தமன் பொன் இராமநாதன்
உயர் கலை யாழ் பல்கலையின் விரிவுரையாளர்
உயிர் காக்கும் சித்த மருந்துகள் உள்ளவரை உருவாக்கிப் பல்
உயிர் காத்த பேராசான் இராமநாதன் இன்றில்லை.

உயிர் காக்க எழுதிய, மறுபதிப்புச் செய்த நூல்கள் பல
உயிர் காக்கும் சித்த மருந்துத் துறையில்
சித்த ஆயுள்வேத மருத்துவ கைநூல் எனப்பல
பல வைத்தியர்களை உருவாக்கிய பேராசான்
சிலையாகிப் போனாரே சிலநாள் முன்
அன்னார் ஆத்மா சிவனடி சேரப் பிரார்த்திக்கின்றோம்.

*லட்சியம் இருக்கும் இடத்தில் அலட்சியம் இருக்காது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தை அமாவாசை (தொடர்ச்சி...

# சிறப்புக்களும் பலன்களும்

– திரு க.கு.க. சிவபாலன் அவர்கள் –

எம் முன்னோர்களாகிய இறந்தவர்களது ஆத்மாவானது தென்புலத்து தேவர்களுடன் இருக்கும்போது அவைகளிற்கு தினம் அமுது கொடுப்பது சந்திரனது வழமையான செயற்பாடு. தட்சனின் சாபத்தால் அமாவாசை தினங்களில் சந்திரன் மறைந்து இருக்கும் நாளில் தென்புலத்தில் அமுது கொடுப்பதற்கு ஒருவரும் இல்லாத காரணத்தால் அவ் ஆத்மாவானது தாங்கள் முன்பு இருந்த வீட்டு வாசலில் வந்திருக்கும். நாம் அமாவாசை தினத்தன்று நம் முன்னோர்களுக்கு செய்யும் பிதிர்க்கடன்களை பார்த்து அன்றைய நிகழ்வில் பங்குபற்றி அவர்களுக்குரிய உணவை ஒரு நாள் ஏற்று நம்மையும் நம் பிள்ளைகளையும் வாழ்த்தி செல்வார்கள்.

இவ்வாறு அமாவாசை திதி வழிபாட்டு விரதமும் பிரார்த்தனையும் செய்யாது விட்டால் தென்புலத்தில் இருந்து அன்று ஒருநாள் மட்டும் வந்த ஆத்மா மனக்கிலேசமுற்று திரியும் அது எமக்கு கூடாது. நமது சைவ சமயமும் முன்னோர்களும் வழிவழியாக உறவுகளை இழந்தவர்கள் அமாவாசை தினங்களில் பிதிர்கடன் வழிபாடு செய்யவேண்டும் என அறிவுறுத்தி உள்ளார்கள். அவ்வகையில் வருகின்ற அமாவாசை அனைத்தும் பிதிர் வழிபாட்டுக்கு உகந்ததாக அமைகின்றது. குறிப்பாக தை அமாவாசை, ஆடி அமாவாசை, மாளய புரட்டாதி அமாவாசை என்ற அடிப்படையில் பிதிர்க்கடன் ஆற்றும் சிவாச்சாரியார் மூலம் எள் கலந்து மூன்று பிண்ட உருண்டை வைத்து பூசை செய்வது அவசியம். மற்றைய அமாவாசை தினத்தில் நமது இல்லங்களில் புனிதமாக இருந்து ஆத்மசாந்தி பிரார்த்தனை செய்து அவர்களுக்குரிய பிரசாதங்களைப் படைத்து வழிபட்டு நம் வருங்கால சந்ததிகளும் செய்து வருவார்களானால் எக்காலமும் பிதிர்தோஷம் அணுகாது.

அறம் செய்வான் திறம் எனும் 252ஆவது திருமந்திரப் பகுதியில் யாவர்க்கும் இயலக்கூடிய அறம்

யாவர்க்குமாம் இறைவர்க்கு ஒரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே.

உண்பதற்கு முன்னம் இறைவனை நினைந்து ஒரு பச்சிலை, பசுவிற்கு ஒரு வாயுறை. இது ஓர் முக்கியம். பசுவிற்கு ஒருபிடி அகத்தியிலை, அறுகம்புல் ஆகிய

*அவசரமாகத் தவறு செய்வதைவிட தாமதமாக சரிவரச் செய்வது மேல்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவு கொடுத்து பசுவை வணங்கினால் எல்லா தெய்வங்களுக்கும் முப்பத்து முக்கோடி தேவர்கட்கும், மூன்று தேவிகளுக்கும், சகல ஜீவராசிகளுக்கும் உணவு கொடுத்த பலன் எமக்கு சேரும். அகத்தியிலை கொடுப்பதன்மூலம் நம் முன்னோருடைய ஆத்மாவும் நரகத்தில் இருந்தால் அவ் ஆத்மாக்களை சொர்க்கத்துக்கு அனுப்பும்படி கோமாதா ஆகிய பசு வாதாடும். அதனால் பசுவுக்கு அகத்தியிலை ஒரு பிடி போடுவது சிறப்பு. பசுவுக்கு அகத்தி இலை கொடுத்தால் அப் பசு யமதர்மராஜனிடம் போய் எனக்கு அமாவாசை தினத்தில் ஒரு கட்டு அகத்தியிலை தந்திருக்கிறார்கள். ஆதலால் அகத்தியிலை தந்தவர்களின் முன்னோர்கள் தெரிந்தோ தெரியாமலோ பாவம் செய்திருப்பதன்மூலம் நரகத்தில் உழல்வார் களானால் அவர்களை இன்றைய தினத்தில் சொர்க்கத்துக்கு அனுப்புவாயாக என்று வாதாடும். இதன் காரணமாகவே பசுவுக்கு ஒரு வாயுறை என்ற கருத்துப்படி நாம் ஆலயங் களுக்கு செல்லுகின்ற காலங்களில் குறிப்பாக திருக்கேதீச்சரம், கொழும்பு பொன்னம்பல வாணேச்சரம், பம்பலப்பிட்டி சைவசிறார் பிள்ளையார் ஆலயங்களிலும் நடைமுறையில் உள்ளதை இன்றும் காணலாம். எந்நாளும் அகத்தியிலை பசுவுக்குக் கொடுக்கலாம். ஆனால் அமாவாசை தினத்தில் கொடுத்தால் அப் பலன் நமது முன்னோருடைய ஆத்மாவுக்கு சேரும். இத்தினத்தில் முன்னோர்களின் இறந்த ஆன்மாக்களுக்கு திதி கொடுத்தும் அகத்தியிலையும் பசுவுக்கு கொடுத்தால் கூடிய புண்ணியம் சேரும். முக்கியமாக தை அமாவாசை, ஆடி அமாவாசை, புரட்டாதி மாளய அமாவாசை தினங்களில் முன்னோர்களை நினைத்து வழிபட்டால் அவர்களின் ஆத்மா நல்வழி அடையும் என்பது திண்ணம். இச் செயல்முறைகளை நாம் கடைப்பிடித்து சிவநெறி ஆகிய அறநெறியில் வாழ்வோம்.

## பாவ வினைகள் பறந்தோடுமே!

*பல்லவி*

ஆற்றங்கரை அமர்ந்த அழகன் முருகன்மீது
அனுதினம் நான் தொடுப்பேன் பாமாலை! (ஆற்றங்...)

*அனுபல்லவி*

போற்றியே முருகனின் பொன்னடிகளைத் தொழுது
புகழ் பாடலே எந்தன் முதல் வேலை! (ஆற்றங்...)

*சரணம்*

உருகி, உருகி நிதம் உமை மகனைப் பாட
உள்ளத்திலே உவகை பொங்கிடுமே!
பெருகிடும் துன்பங்கள் தீர்ந்திடுமே! அவனால்
பேரின்பப் பெருவாழ்வும் கிடைத்திடுமே!

குற்றங் குறைகள் யாவும் குமரன் அருளாலே
குறைந்தே போகிடுமே! அவனைப்
பற்றோடு தினமும் பரவிப் பணிவோர்க்கு
பாவ வினைகள் யாவும் பறந்தோடுமே!

- கி. குலசேகரன் -

ஒரு காரியம் நிறைவேறும்வரை அவற்றைப்பற்றி அறிவாளி வெளியில் சொல்லமாட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரியனும் சூரிய வழிபாடும்

– திரு வி. செல்வரத்தினம் அவர்கள் –

சூரிய வழிபாடு மிகப் பழமையானது. பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கற்கால மனிதர்கள் சூரிய வழிபாடு செய்திருந்தார்கள். மேற்கு ஆசிய நாடுகள் மற்றும் எகிப்து, கிரிஸ், மெக்ஸிக்கோ போன்ற நாடுகளிலும் கீழை நாடுகளான ஜாவா, தாய்லாந்து போன்ற நாடுகளிலும் சூரிய வழிபாடு பண்டைக் காலத்திலேயே இடம்பெற்றிருக்கின்றது.

உலகெங்கும் வழிபாட்டுக்குரியவராக விளங்குபவர் சூரியன். அவுஸ்திரேலியாவின் பழங்குடி மக்களும் ஆபிரிக்காவின் பிகமி என்ற பழங்குடி மக்களும் கூடச் சூரியனைத்தான் வணங்குகின்றனர். இந்தியர், ஈரானியர், பாபிலோனியர், எகிப்தியர், கிரேக்கர், ரோமானியர் போன்றோரும் சூரிய வழிபாட்டில் ஈடுபடுகின்றனர். சீனாவிலும் ஜப்பானிலும் சூரிய வழிபாடு செய்கின்றனர்.

சூரியனுக்குப் பன்னிரண்டு திருநாமங்கள் உண்டு. அவற்றைச் சொல்பவர்களுக்கு எல்லா மங்கலமும் கிடைக்கும் என்பது ஆன்றோர் வாக்கு. அவையாவன:-

| | | | |
|---|---|---|---|
| மித்ராயை நம | ரவயே நம | சூர்யாய நம | பானுவே நம |
| ககாய நம | பூஷ்ணே நம | விரண்யகர்ப்பாய நம | மரீசய நம |
| ஆதித்யாய நம | ஸவித்ரே நம | அருணா நம | பானகராய நம |

இந்தப் பன்னிரண்டு திருநாமங்களையும் கூறி வணங்கும் அனைவருக்கும் நன்மை கிடைக்கும்.

சூரிய பகவான் இருக்கும் இடம் சௌர மண்டலம் எனக் கூறப்படுகிறது. சூரியன் இல்லாவிட்டால் பூமியில் உயிர் இயக்கமே இருக்கமுடியாது. பூமி தனக்குத் தேவையான சக்தி முழுவதையும் சூரியனில் இருந்தே பெறுகிறது. வெப்பம், மழை வீழ்ச்சி, காற்றின் இயக்கம், தாவர வளர்ச்சி முதலான யாவற்றுக்கும் மூலசக்தி சூரியன்தான்.

சூரியன் பூமியிலிருந்து சுமார் 14195 கோடி கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது. சூரியனின் விட்டம் 1392000 கிலோமீற்றர். சூரியன் சுமார் 14.95 கோடி கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது. சூரியனிலிருந்து ஒரு ஒளிக்கதிரின் வேகம் விநாடிக்கு 186000 மைல் வேகத்தில் வந்து பூமியை அடைகிறது. சூரிய சக்தியில் பூமி பெறுவது இரண்டு இலட்சம் கோடியில் ஒரு பங்கு ஆகும். நமது பூமியை விட 10 இலட்சம் மடங்கு பருமனில் பெரியது.

சூரிய கதிரொளியைப் பெற்றுத் தாவரங்கள் பிராணவாயுவை வெளிவிடுகின்றன. இதனையே மனிதர்களும் மற்ற உயிரினங்களும் ஏற்று உயிர்வாழ முடிகிறது. சூரியன் இல்லாவிட்டால் பூமியில் எந்த உயிரினங்களும் தாவரங்களும் உயிர்வாழ முடியாது.

வட்ட அமைப்பில் சூரியன் நடுவில் இருக்க, நவக்கிரகங்கள் சுற்றிலும் அமைந்துள்ளன. இத்தகைய இயந்திர அமைப்பும் சூரிய வழிபாடும் இந்தியாவிலும் இலங்கையிலும் மட்டும்தான் உண்டு. உலகளாவிய வழிபாடு சூரியனுக்குரியது. எகிப்தியர்கள் சூரிய வழிபாட்டால் புத்தியை வளர்ப்பதாகவும் ஆரோக்கியத்தை அளிப்பவர் சூரியன் என்று நம்புவதாகவும்

*மனிதன் தோல்வியின் மூலமே புத்திசாலி ஆகின்றான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறப்படுகிறது. நைல் நதிக்கரையிலும் சூரிய வழிபாடு உண்டு. கிரேக்கர்களின் புராணத்தில் சூரியன் ஹிலியோஸ் என்ற பெயருடன் வழிபடப்படுகிறது. மேலும் சந்திரனை சூரியனின் சகோதரியாக இவர்கள் கருதுகிறார்கள். மெக்ஸிக்கோ, பெரு ஆகிய தென் அமெரிக்க நாடுகளில் சூரிய தேவனை வீரம் செறிந்த தேவனாக வைத்து வழிபடுகிறார்கள்.

சூரிய பகவான் நோய்கள் அகற்றக்கூடியவர் என்று வேதங்களும் உபநிடதங்களும் கூறுகின்றன. இருதய ரோகத்தைச் சூரியன் குணப்படுத்துவார் என்று ரிக் வேதம் கூறுகின்றது. சூரிய பகவான் கண் பார்வையும் அளிப்பார் என்று சில நூல்களில் கூறப்பட்டுள்ளது. சூரியனை வழிபட்டுத் தொழ நோய்கள் நீங்கியதாகவும் சரித்திரம் உண்டு. மக்கள் உடலில் சூரிய ஒளி பட்டால் ஆரோக்கியம் கிடைக்கும் என்று ஆயுள்வேதத்தை அடிப்படையாகக் கொண்ட நூல் கூறுகிறது.

எருக்கம் இலையைக் கையில் வைத்துக்கொண்டு சூரிய ஸ்துதியைக் கூறினால், உடலின் ஒவ்வொரு அங்கமும் வலிமையும் வனப்பும் பெறும் என்று ஆன்றோர் கூறுகின்றனர். சூரிய நமஸ்காரம் கண்ணொளியைச் சிறப்பாக்கும். விடியற்காலையில் எழுந்து நீராடி, காலையில் உதயமாகும் சூரியனை நோக்கி வழிபாடு செய்வதே சூரிய நமஸ்காரம் எனப்படும். சூரியனுக்குரிய கிழமையாகிய ஞாயிற்றுக்கிழமை அன்று சூரிய நமஸ்காரம் செய்வது சிறந்த பயனைத் தரும்.

ஞாயிற்றுத் தொகுதியிலுள்ள கோள்களில் மிகவும் சிறிய கோள் புதனாகும். புதன் கோளின் விட்டம் ஏறத்தாழ 4850 கிலோமீற்றராகும். சூரியனிலிருந்தே சூரிய மண்டலத்திலுள்ள கோள்கள் மற்றும் துணைக்கோள்கள் என்பன தோற்றம் பெற்றன.

சூரிய மண்டலம் என்பது சூரியனையும் அதனை மையமாகக் கொண்ட நீள்வட்டப் பாதையில் சுழலும் ஒன்பது கோள்களையும் குறிக்கும். சூரிய மண்டலத்தில் புதன், வெள்ளி, பூமி, செவ்வாய், வியாழன், சனி, யூரேனஸ், நெப்டியூன், புளூற்றோ என்னும் ஒன்பது கோள்கள் உள்ளன. இந்த ஒன்பது கோள்களில் புதன், வெள்ளி. பூமி, செவ்வாய் ஆகிய நான்கு கோள்களும் அகக் கோள்கள் எனப்படும். வியாழன், சனி யூரோனஸ், நெப்டியூன், புளூற்றோ ஆகிய ஐந்து கோள்களும் புறக்கோள்கள் எனப்படும்.

மூலச் சூரியன் சுமார் 450 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியிருக்க வேண்டும். மூலச் சூரியனிலிருந்து பூமி முதலான கோள்கள் 200 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது.

சூரியனை மையமாகக் கொண்டு ஒன்பது கோள்களும் நீள்வட்டப் பாதையில் சூரியனைச் சுற்றி வருகின்றன. சூரியனைச் சுற்றிவரும் ஒன்பது கோள்களும் ஒன்றுடன் ஒன்று மோதாமல் வரையறுக்கப்பட்ட சீரான பாதையில் சுற்றிவருகின்றன. சூரிய மண்டலத்திலுள்ள ஒவ்வொரு கோளும் தன்னைத்தானே சுற்றுவதுடன், சூரியனையும் சுற்றி வருகின்றன.

சூரியன் இல்லாவிட்டால் பூமியில் உயிர் இயக்கமே இருக்க முடியாது. பூமி தனக்குத் தேவையான சக்தி முழுவதையும் சூரியனில் இருந்தே பெறுகிறது. வெப்பம், மழை வீழ்ச்சி, காற்றின் இயக்கம், தாவர வளர்ச்சி முதலான யாவற்றுக்கும் மூலசக்தி சூரியன்தான்.

*முயலும் வெல்லும். ஆமையும் வெல்லும். ஆனால் முயலாமை வெல்லாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக் கோள்களில் முதற்கோள் புதன். ஞாயிற்றுத் தொகுதியிலுள்ள கோள்களில் மிகவும் சிறிய கோள் புதனாகும். புதன் கோளின் விட்டம் ஏறத்தாழ 4850 கிலோமீற்றராகும். மேலை நாட்டவர்கள் புதனைக் கடவுளின் தூதன் என்று நம்பினர்.

புதனுக்கும் சூரியனுக்கும் இடையிலான தூரம் 5.8 கோடி கிலோமீற்றராகும். புதன் தன்னைத்தானே ஒரு முறை சுழற்வதற்கு 88 நாட்கள் எடுக்கும் அது சூரியனை நீள்வட்டப் பாதையில் சுற்றுவதற்கு 88 நாட்கள்தான் எடுக்கும். அதாவது புதன் தன்னைத் தானே சுற்றும் காலம்தான் அது. சூரியன் உதிப்பதற்குச் சற்று முன்னர் கிழக்கு அடிவானத்திலும் புதனை நாம் அவதானிக்க முடியும். மாலை நேரத்தில் நன்றாகத் தெரியும்.

## வெள்ளி

வெள்ளி சூரியனிலிருந்து சுமார் 10.8 கோடி கிலோமீற்றர் தூரத்தில் அமைந்திருக்கிறது. இதன் விட்டம் 12104 கிலோமீற்றராகும். வெள்ளியின் ஒரு பக்கம் சூரியனை நோக்கியே காணப்படும். வெள்ளி தன்னைத் தானே சுற்றுவதற்கு 293 நாட்களும் சூரியனைச் சுற்றி வருவதற்கு 285 நாட்களும் எடுக்கும். வெள்ளி மாலை வெள்ளியாகவும் விடிவெள்ளியாகவும் வானத்தில் காணப்படுவது ஒரு தனிச்சிறப்பாகும். சூரியன் மறைந்த பின் மேற்கு வானத்தில் மாலை வெள்ளியாகவும் சூரியன் உதயமாவதற்கு முன் கிழக்கு வானில் விடிவெள்ளியாகவும் இது தோன்றுகிறது.

## பூமி

ஞாயிற்றுத் தொகுதியிலுள்ள மூன்றாவது பெரிய கோள் பூமியாகும். இது சூரியனிலிருந்து 14.9 கோடி கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது. பூமியின் கிழக்கு மேற்கான முனைவு விட்டம் 12710 கிலோ மீற்றராகும். வடக்கு தெற்கான முனைவு விட்டம் 12710 கிலோமீற்றராகும். இதன்படி பூமி சரியான உருண்டை வடிவம் அல்ல என்பது தெரிகிறது.

பூமி இரண்டு செயல்களைச் செய்கின்றது. அவையாவன புவிச்சுழற்றி, புவிச்சுற்றுகை. பூமி தன்னைத் தானே சுற்றுவதைப் புவிச்சுழற்றி என்பர். சூரியனை நீள்வட்டப் பாதையில் சுற்றி வருவதைப் புவிச் சுற்றுகை என்பர். புவிச்சுழற்சி காரணமாக இரவு பகல் உண்டாகிறது. புவிச் சுற்றுகையினால் பருவ காலங்கள் தோன்றுகின்றன. பூமி தன்னைத் தானே சுற்ற 24 மணித்தியாலங்கள் எடுக்கின்றன. புவிச்சுழற்சி மேற்கு கிழக்காக நடைபெறுகின்றது. பூமி சுழற்றியற்றிருக்குமானால், பூமியின் ஒரு பகுதியே சூரியனை என்றும் எதிர்நோக்கியிருக்கும். பூமியின் ஒவ்வொரு பகுதியும் சூரியனின் ஒளிக்கதிர்களைப் பெறுகின்றன. பூமியின் மேற்பரப்புச் சூரியனை நோக்கியிருக்கும்போது அது பகலாகவும், அதே மேற்பரப்புச் சூரியனை நோக்கியிராதபோது அங்கு இரவாகவும் தோன்றுகிறது.

எனவே, புவியின் சுழற்சியினால் இரவும் பகலும் மாறி மாறிப் பூமியில் தோன்றுகின்றது. பூமி சூரியனைச் சுற்றிவர $365^1/_4$ நாட்கள் எடுக்கும். அதாவது ஒரு ஆண்டு எடுக்கும். ஒரு காலகட்டத்தில் மக்கள் தாம் வாழும் பூமி தட்டை வடிவானது என்று நம்பி வாழ்ந்தனர். பின் மகலன் என்ற கடலோடி 1522ஆம் ஆண்டு ஸ்பெயின் நாட்டிலிருந்து கப்பலில் புறப்பட்டு உலகைச் சுற்றி வந்து, உலகம் உருண்டையானது என்று நிருபித்தார். பூமி உருண்டை வடிவம் கொண்டது எனக் கூறமுடியாது. அதாவது பூமியின் கிழக்கு மேற்காகத்

*வாழ நினைப்பவனுக்கு வானம்கூட வாயிற்படிதான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனி மத்திய விட்டம் 12756 கிலோமீற்றர்களாகவும், வடக்கு தெற்காக முன் விட்டம் 12710 கிலோமீற்றர்களாகவும் இருக்கின்றது. அதாவது தோடம்பழம் போன்று உச்சிகளில் தட்டையானது போல் இருக்கும். 1969 ஆம் ஆண்டு அமெரிக்க விண்வெளி வீரர்கள் சந்திரமண்டலத்திற்குச் சென்றனர். நாம் பூமியிலிருந்து சந்திர உதயத்தைப் பார்ப்பதுபோல அவர்கள் சந்திரனிலிருந்து பூமி உதயமாவதைக் கண்டனர். அப்படிக் கண்டபோது பூமி சந்திரனைப்போலவே உருண்டை வடிவமாகக் காணப்பட்டது என்று கூறினார்கள்.

## செவ்வாய்

செவ்வாய் சூரியனிலிருந்து நான்காவது கோளாக அமைந்துள்ளது. சூரியனிலிருந்து செவ்வாய் 22.8 கோடி கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. செவ்வாய் தன்னைத் தானே சூழல 24 மணி 36 நிமிடங்கள் எடுக்கும். சூரியனைச் சுற்றிவர 687 நாட்கள் எடுக்கும். புவியின் பருமனில் அரைப்பங்கினைக் கொண்டிருக்கும் செவ்வாயின் விட்டம் 6790 கிலோமீற்றர் ஆகும். செவ்வாய் பூமி போன்ற வளிமண்டலத்தைக் கொண்டிருக்கும் ஒரு கோளாகும். செவ்வாய்க் கோளுக்கு பொபொஸ், டேமோஸ் என இரு சந்திரன்கள் இருக்கின்றன. பொபொஸ் 16 கிலோமீற்றர்கள் விட்டமுள்ள சிறியதொரு துணைக்கோள். டேமோஸ் 8 கிலோமீற்றர்கள் குறுக்களவுடையது.

## வியாழன்

சூரிய மண்டலத்திலுள்ள கோள்களில் மிகப்பெரியது வியாழனாகும். சூரியனிலிருந்து ஏறத்தாழ 77.8 கோடி கிலோமீற்றர் தூரத்தில் வியாழன் கோள் அமைந்துள்ளது. மிகப்பெரிய கோளான வியாழன் தன்னைத்தானே ஒருமுறை சுற்றிவர 9 மணி 50 நிமிடங்கள் எடுக்கும். வியாழன் சூரியனை ஒருமுறை சுற்றிவர 11 வருடங்கள் 10 மாதங்கள் எடுக்கிறது. வியாழனில் பெரிய செம்புள்ளி ஒன்று இருக்கிறது. இச் செம்புள்ளி 48720 கிலோமீற்றர் அகலமும் 112630 கிலோமீற்றர் நீளமுமுள்ள ஒரு இறக்கமாகும். வியாழன் 13 துணைக்கோள்களைக் கொண்டிருக்கிறது.

## புளூற்றோ

சூரிய மண்டலத்தின் இதுவரை அறியப்படட்ட இறுதிக்கோள் புளூற்றோ ஆகும். இது சூரியனில் இருந்து 590 கோடி கிலோமீற்றர் தூரத்தில் இருக்கிறது. புளூற்றோவின் விட்டம் 3000 கிலோமீற்றர்கள் ஆகும். இது செவ்வாயில் சிறிய கோள். இது தன்னைத் தானே ஒரு தடவை சுற்ற 247 ஆண்டுகளும் 255 நாட்களும் எடுக்கின்றன. புளூற்றோவிற்குத் துணைக்கோள்கள் இல்லை.

## யூரேனஸ்

யூரேனஸ் சூரியனிலிருந்து 287 கோடி கிலோமீற்றர்கள் தொலைவில் உள்ளது. இது ஒரு தடவை தன்னைத் தானே சுழல 10 மணி 45 நிமிடங்களையும் ஒரு தடவை சூரியனைச் சுற்றிவர 84 ஆண்டுகளையும் எடுக்கும். பூமியிலும் பார்க்க யூரேனஸின் விட்டம் நாலரை மடங்கு அதிகமாகும். யூரேனஸின் மத்திய கோட்டின் விட்டம் 52000 கிலோ மீற்றர்களாகும். யூரேனஸில் 5 துணைக்கோள்கள் உண்டு. இது வெகு தூரத்தில் இருக்கிறது.

*விடியும் என்று விண்ணை நம்பு. முடியும் என்று உன்னை நம்பு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நெப்ரியூன்**

சூரிய மண்டலத்தின் எட்டாவது கோள் நெப்ரியூன் ஆகும். இது சூரியனிலிருந்து 449.7 கோடி கிலோமீற்றர்கள் தூரத்தில் உள்ளது. இக் கோளின் விட்ட அளவு 48000 கிலோமீற்றர்கள் ஆகும். இது தன்னைத்தானே சுற்றிவர 15 மணி 50 நிமிடங்கள் எடுக்கும். சூரியனை ஒரு தடவை சுற்றிவர 164 ஆண்டுகள் 298 நாட்கள் எடுக்கும்.

**சந்திரன்**

பூமியின் துணைக்கோள் சந்திரனாகும். பூமியிலிருந்து 378000 கிலோமீற்றர்கள் தூரத்தில் இது அமைந்துள்ளது. இதன் விட்டம் ஏறத்தாழ 5480 கிலோமீற்றர் ஆகும். சந்திரன் பூமியைச் சுற்றிவர 29.5 நாட்கள் எடுக்கிறது. இது தன்னைத் தானே சுழல அதே காலம்தான் எடுக்கிறது. சந்திரனின் மேற்பரப்பு மலைப்பாங்கான நிலத்தோற்றம் உடையது.

1969 யூலை 20 அன்று அமெரிக்க அப்பலோ -II இரு விண்வெளி வீரர்களுடன் சந்திரத் தரையில் இறங்கியது. அதன் பின்னர் அவர்கள்மூலம் புவியைப் போன்றே சந்திரனும் பாறைகளாகத்தான் இருக்கிறது என்று அறிவிக்கப்பட்டது.

சூரிய பகவான் தெற்கில் இருந்தே வடக்கே செல்வதை உத்தராயணம் என்றும், வடக்கிலிருந்து தெற்கே செல்வதை தட்சிணாயணம் என்றும் கூறுவார்கள். சூரிய பகவான் மகர ராசியில் பிரவேசிப்பதை மகர சங்கராந்தி என்று கொண்டாடுவார்கள். சூரிய பகவானுக்கு எருக்கம் இலை விசேஷமானது என்று கூறுவார்கள். அதனால்தான் ரதசப்தமித் திருநாளில் எருக்கம் இலையைத் தலையில் வைத்துக்கொண்டு நீராடுவது சிறப்பு என்று முன்னோர்கள் கூறுவது உண்டு.

தை மாதத்தின் முதல்நாள் தேவர்களுக்கு விடியற்காலைப் பொழுது என்று சிவாகமம் கூறுகிறது. அந்த நாளே சூரியன் மகர ராசியில் பிரவேசிக்கும் திருநாளாகும். சங்கராந்தியன்று சூரிய தேவனை, நல்ல பயிர் விளைச்சலைத் தரும் தெய்வமாகக் கருதிப் பூசித்து வழிபடுகிறார்கள். உழவுக்குச் சிறப்புத் தரும் மாட்டுக்கு மறுநாள் பூசையிட்டுக் கொண்டாடுகிறார்கள். திறந்த வெளியில் சூரிய ஒளியில் பொங்கல் படைத்துக் கொண்டாடுவது தமிழர் வழக்கம்.

"யார் நமது அறிவைத் தூண்டுகிறாரோ அந்த
சுடர்க் கடவுளின்
மேலான ஒளியைத் தியானிப்போமாக"

-இது சூரிய காயத்திரி மந்திரம்.

சூரியன் உதயமாகும் வேளையில் அவன் உயிரினங்களைத் தட்டி எழுப்புகிறான். அதேபோல காயத்திரி மந்திரம் ஆத்மபோதத்தில் தட்டி எழுப்பப்படுவதற்கு உரியதாகின்றது.

சூரிய வெளிச்சம் பட்டு உள்ளத்துக்கு விழிப்பை ஏற்படுத்துகிறது. கல்வி மனதைப் பண்படுத்துவதைப்போல காயத்திரி மந்திரம் மனிதனுடைய ஆத்ம சொருபத்தை உயர்த்துகிறது. இதனாலேயே சூரியனுக்குரிய இந்த மந்திரம் வேத மந்திரங்களில் மிகச் சிறப்பானதாகக் கருதப்படுகிறது.

*தூய்மையே எல்லா நல்லெண்ணங்களுக்கும் அடிப்படை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குனி மாத வாராந்த நிகழ்வுகள்

**01.03.2024 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "குமரகுருபர சுவாமிகள்"

வழங்குபவர் :- திருமதி சண்முகவடிவு தில்லைமணி அவர்கள்

[சைவப்புலவர்]

---

**08.03.2024 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "கந்தன் பெருமை"

வழங்குபவர் :- திரு பரா. ரதீஸ் அவர்கள்

[வட இந்து மகளிர் கல்லூரி ஆசிரியர்]

---

**15.03.2024 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

"இன்னிசை"

(பக்கவாத்திய சகிதம்)

---

**22.03.2024 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "மகாபாரதம்" (தொடர்)

வழங்குபவர் :- செஞ்சொற் செல்வன் இரா. செல்வவடிவேல் அவர்கள்

[ஆசிரியர்]

---

**29.03.2024 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

## ஞானச்சுடர் பங்குனி மாத வெளியீடு

வெளியீட்டுரை :- திரு வ. கணேசமூர்த்தி அவர்கள்

[இளைப்பாறிய அதிபர்]

மதிப்பீட்டுரை :- திரு நி. பாபுதரன் அவர்கள்

[ஆசிரியர்]

**315ஆவது மலர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org